விலை 20 காசு

10-12-67

பெ. சீனுவாசகன்,
விருதுநகர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

ஆண்டி என்னும் குருசாமி,
திருவில்லிபுத்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

வ.

கல்லறையின் கண்ணீர்!

...ள ராசேந்திரா!

...ர் சாரங்கபாணி!!

நீங்கள் உயிரோடு எங்கள் மத்தியில் உலவுவதா... கருதிக்கொண்டு இந்த மடலை எழுதுகிறேன்.

தில்லை மாநகரத்தில் டில்லி மாநகரத்து ஆதிக்க ...றியர்களின் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போர் முழக் ... செய்தபோது, குண்டுபாய்ந்த நெஞ்சோடு குருதி ...காப்பளிக்கப் பிணமாக வீழ்ந்த சிவகங்கைச் சிங்கமே! அடலேறே மாணவமணியே! நீ இன்னும் எங்களுடன் இருக்கிறாய்; உணர்வாக — உயிரின் மூச்சாக என்று கருது வதன் விளைவே இந்தக் கடிதம்.

தீங்கு தரும் இந்தியினை எதிர்க்க — தேன்பாகாம் கற் கண்டாம் — தென் தமிழைக் காக்கத் தீ நாக்குகளால் தழு வப்பட்டுச் சாவதையே தமிழுக்கு நான் செய்யும் தொண் டென்று நெருப்புக்குள் புகுந்துவிட்ட கண்மணியே! மாவீரா! மறத்தமிழா! மாணவத் திருவிளக்கே! மாயூரம் சாரங்கபாணியே! நீயும் எம்முடன் இருக்கிறாய்; ரத்தத் தோடு ரத்தமாய் — சதையோடு சதையாய் — நாடித் துடிப் போடு துடிப்பாய் என்று நினைத்துத்தான் இந்த நீட் டோலை தீட்டுகிறேன்.

இந்தி, திணிக்கப்படமாட்டாது; ஆனால் மெல்ல மெல்ல நுழையும் — தீவட்டிக் கொள்ளைக்காரனைப்போல வராது; ஆனால் ஆசைகாட்டிக் குழந்தையின் கழுத்தை முறித்து அணிமணிகளைக் கழற்றிக்கொண்டு ஓடும் தந்திரக்காரக் கள்வனைப்போல் வரும் என்பதைத் தெளி வாக உணர்ந்துகொண்ட தமிழகத்து மாணவர்கள் 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் புரட்சியைத் தொடங்கினர். இங்குள்ள சேக்கிழார் வழிவந்த செம் மல் பக்தவத்சலனார் ஆட்சியில் பிணக்காடு-ரணக்காடு! தீக்குளிப்பு; துப்பாக்கிச் சாவு! மாணவர்கள்மீது அடக்கு முறை வெறியாட்டம்!

அப்போதுதான், ஆருயிர்ச் செல்வங்களே! உங்கள் உயிரும் பறிக்கப்பட்டது! ஆனால் அன்றெழுந்த உணர் வைப் பறிக்க எந்த ஆதிக்க வெறியராலும் முடியாது என் பதைத் தமிழகம் தலைநிமிர்ந்து அறிவித்துவிட்டது.

நிலைமையின் பயங்கரத்தை உணர்ந்த டெல்லிப் பேரரசின் இயக்குநர்கள், நேருவின் உறுதிமொழியை விரைவில் நிறைவேற்றுவோம் என்று தமிழகம் நோக்கிக் குரல் கொடுத்தார்கள். நேருவின் உறுதிமொழி என்ன?

> "இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்கும்."

அந்த உறுதிமொழி, முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமானால் அரசியல் சட்டத்தில்தான் திருத்தம் கொண்டுவரவேண்டும்; இப்... மசோதா, ஆங்கிலம் எது எதில் ... வகையில்; ஆங்கில மொழி எந்த ... லாம் — எதுவரையில் அனுமதிக்கப்படு... லேதான் அமையக்கூடியதாகும். நேரு... தற்கிணங்க அவரது மறைவிற்குப் பிறகு அ... யும் — அஸ்தியையும் நாட்டின் வயல்வெளிகள்... மூலம் தூவியவர்கள், அவர் இந்தி பேசாத... அளித்த உறுதிமொழியையும் அவைகளோடு ... தூவிவிட்டார்கள் என்பது இப்போது அவர்கள் ... கிற பிடிவாதத்திலிருந்து தெரிகிறது.

இந்தி ஆட்சி மொழியாக-இணைப்பு மொழியா மாறிவிடுகிற அந்தஸ்தைப் பெற்றுவிட்ட பிறகு (பெற்று விடுமேயானால்) இந்தி பேசாத மாநில மக்கள், குறிப் பாகத் தமிழ் மக்கள் உரிமைகளை இழப்பர்! அதனால்தான் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தாமல் வெளியேறிவிட்ட வர்களின் மொழியான ஆங்கில மொழி, இணைப்பு மொழி யாக இருந்தால் மாநிலங்களுக்குள் ஏற்றத்தாழ்வு ஏற் படாததுமட்டுமல்ல; உலகநாடுகளோடு தொடர்பு கொள் கிற மொழியாகவும் அமையும். ஆகவே ஆங்கிலம் போதும் என்பது இந்தி பேசாத மாநிலத் தலைவர்களின் — குறிப் பாக தமிழக மக்கள் தலைவர்களின் முடிவான கருத்தாகும்.

அதற்கு இன்று கொண்டு வருகிற 'மசோதா' நிறை வேறுமேயானால் முழுமையான திருப்தி அளிக்காது. எனி னும், மசோதா கொண்டு வருவதற்காக வாக்களித்த தி. மு. க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தக்க திருத்தங்களை யும் கொடுத்திருக்கிறார்கள்.

அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற இலட்சியப் பயணத்தில் இடையிலே இளைப்பாறுவதற்குக் கிடைத்த பனை மரத்து நிழலைப்போன்றதுதான் இந்த மசோதா நிறைவேற்றம் என்று கழகத்தினர் கருதுகின்றனர்.

> "இல்லை; இல்லை; இதுதான் அணிதேர்ப் புரவி ஆட் பெரும் படையுடன் மன்னர்க் கிருக்க இடம் தரும் ஆல மரத்து நிழல்"

க...

கல...

...

அவர்கள் ...

மு... மையையு... பதுபோலப்... மத்திய ஆ... — இப்போது ...யென்று இவ... களாம்.

ஒற்றுமை — ஒருமைப்பாட்... பிரதமர் இந்திராவிடம் சொன்... குள் நினைத்திருப்பார்.

> "இந்திய ஒருமைப்பாடு... இங்கே எங்களுக்குள் தலைவர் ... ஒருமைப்பாடு இல்லையே! இ... சொல்லி அழுவது?"

என்று தானே நினைத்திருப்பார்!

பரவாயில்லை; 'இந்தி வேண்டாம்' என்ப... விலே ஒரு மாணவர் குழு சென்றது — தமிழ்த் தாய் களை வாரியணைத்து வாழ்த்தி அனுப்பினாள்.

இரண்டாவது ஒரு குழு சென்றது; இந்தி அரக்கிக்... வரவேற்புக் கூறித் திரும்பியது.

தமிழன்னை கண்ணீர் வடிக்கிறாள்; அந்தக் கண்ணீ ரோடு, கல்லறைச் செல்வங்களே! உங்கள் கண்ணீரும் கலங்குகிறது.

[முரசொலி, மறவன் மடல்.]

காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 10—12—67 இதழ் 20

வாக்குறுதிக்குச் சட்டம்?

"......I had given on an earlier Occation an assurance about no major change being made in regard to the use of English, without the consent and approval of the non-Hindi speeking people. That represented not only my view-point, but the view-point of our Government. The assurance was made largely with the approval of the House. We stand by that assurance completly. There is not an iota of difference from what we ad said then......"

இந்திய நாடாளுமன்றத்தில் காலஞ்சென்ற பிரதமர் நேரு அவர்கள், மத்திய அரசின் இந்திக் கொள்கையின் மீது, இந்தி பேசாத பகுதி மக்களுக்கெழுந்த அச்சத்தின் மீது தரப்பட்ட வாக்குறுதி பற்றியதொரு வாக்குறுதியே மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த கிழமை, நேருவின் வாக்குறுதிக்குச் சட்ட வடிவம் தரும் முயற்சியாக ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு அதன் எதிரொலியாக நாடாளுமன்றம் படாத பாடுபட்டுக்கொண்டிருக்கிறது.

வாக்குறுதி பற்றிய இந்த வாக்குறுதி — அல்லது விளக்கம் என்ன சொல்லுகிறது?

"இந்தி பேசாத பகுதி மக்களது இசைவையும், இணக்கத்தையும் பெறுமல், ஆங்கிலம் இப்போது பயன்படுத்தப்படும் முறையில் பெரும் மாறுதல் எதுவும் இல்லையென்று முன்னேர் சமயம் நான் வாக்குறுதி அளித்திருக்கிறேன். அந்த வாக்குறுதி என் சொந்த நோக்கம் மட்டுமே அல்லாது நம்முடைய அரசாங்கத்தின் கருத்துமாகும். அந்த வாக்குறுதி இந்த நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை இசைவுடன் தரப்பட்டதுமாகும். முழுக்க முழுக்க நாம் அந்த வாக்குறுதியைப் பின்பற்றி நிற்போம். அப்போது நாங்கள் அளித்த
அணு அளவுகூட வேறுபா

1963-ம் ஆண்டு ஏப்ரல் திங்
களவையில் ஆட்சி மொழி
பிரதமர் நேரு அவர்களது பதி

தான் அளித்த வாக்குறு
ருந்து நாம் என்ன பெறுகிறோம்

(1) இந்தி பேசாத பகுதி
இப்போதைய ஆங்கி
மாறுதல் ஏதுமில்லை.

(2) இது நேருவின் கருத்
சார்ந்திருந்த அரசா

(3) நேருவின் வாக்குறுதி
போதைய நாடா
பான்மை இசைவு கி

(4) அவரது வாக்கு
ஒப்புதலுக்கு சமர்ப்பி

(5) இந்த வாக்குறுதி
அணு அளவுகூட க
கிடையாது.

என்பதெல்லாம் யூகித்து அ
கொண்டே தெளிவுபெற முடி

"ஆங்கிலம் ஓர்
நீடித்திருக்கும்; இந்தி
லில்லாத மாநிலங்கள
பும்வரை ஆங்கில
மாட்டேன்."

என்பதுதான் நேருவின் வா
யில் ஏற்பட்ட சீனத் தொல்லை
காரத்தில் குமுறிக்கொண்டிரு
நீவி விடுவதற்காக இந்தியத்
இதழ்கள் அனைத்திலும் நேரு
தோடு வெளியானதாகும் இ

இந்த வாக்குறுதியைத்
யின் முன்வைத்து. அதன்
பெற்றிருப்பதாக நேருவே,
கூறி இருக்கிறர். 1963லே

இந்த விளக்கம் தரப்ப
ஆகின்றன. நாடாளு மன்றம்
தேர்தலைத்தான் சந்தித்திருக்

1967-பிப்ரவரி அல்லத்
நேருவின் இந்த விளக்கத்
கேட்டுக் கொண்டிருந்தவர்
1967-க்குப் பின்னர் அவை
யிலும், நாடாளுமன்றத்திலு

"ஆங்கிலத்தை அகற்ற
அளித்த வாக்குறுதிக்கு விரு
பல துணைப் பிரிவுகளைச்
டுள்ள புதிய மசோதாவுக்கு
கொண்டுள்ள உறுப்பினர்கள்
கணைகளையும், விடுக்கின்ற
கின்ற அச்சுறுத்தல்களையும்

நாள் மாநிலங்
சட்டவாதத்தின்போது
ின் ஒரு பகுதியே இது.
பற்றிய விளக்கத்தில்

மக்களது இசைவின்றி
லத்தின் நிலையில் பெரும்

து மட்டுமல்ல; அவர்
கத்தின் கருத்துமாகும்.
கு 1963 லேயே அப்
ந மன்றத்தின் பெரும்
டத்திருக்கிறது.
தி நாடாளுமன்றத்தின்
கப்பட்ட ஒன்றேயாகும்.
ய நிறைவேற்றுவதில்
த்து மாற்றம், வேறுபாடு

ல — சொல்லாட்சி
து.

ணை மொழியாக
மொழி புழக்கத்தி
மக்கள் விரும்
ழியை அகற்ற

றுதி. 1962-ல் எல்லை
ின்போது, மொழி விவ
மக்களது உள்ளங்களை
ணக்கண்டத்து ஏடுகள்,
வர்களது கையொப்பத்

1963ல் மக்களவை
திரன்மை ஒப்புதலைப்
ளு மன்றத்திலேயே

நான்கு ஆண்டுகளே
அதன்பின் ஒரே ஒரு
து. அதுவும் 1967-ல்.

ர்ச் வரையில் முதலில்
அவையில் அமர்ந்து
பெரும்பாலோர்தான்
பட்ட அமைச்சரவை
ற்றிருக்கிறர்கள்.

டேன்" என்று நேரு
தக்க - விரும்பத்தகாத
த்துச் சமர்ப்பிக்கப்பட்
ளவையில், இந்திவெறி
தாடுக்கின்ற கண்டனக்
கூவல்களையும், ஊட்டு
க்கும்போது, இந்த நாடு

அப்படியே ஏற்ற
களுக்குச் சாதகமான
அது. இந்தி பேசாத
முழுமையாக நிறைவே
வோர்—எதற்காகக் சு
ஐயத்தை விளைவிக்
அவர்கள், இந்திப் பி
தான் ஏது?

இந்தப் பிரச்சினை
பற்றி நேரு என்ன செ

I Would l
nate Langua
require it, a
decision not
ple, but to
people.

என்று சொல்லி இந்
அடி அல்லவா கொ

"ஆங்கிலத்
மக்கள் அதனை
வேண்டுகிறார்களோ
கொண்டிருக்க,
பற்றிய முடி
தவர்களிடம்
தெரியாதவர்க

ஆங்கிலம்பற்றி எடு
காரர்களுக்கு இடமளி
களிடம்தான் விடுவே
கிறார். அதுவும் ம
ஆகஸ்டு திங்கள் 7-

அரசியல் சட்
கிலத்தையும் இந்
வேண்டும் என்று
கொண்டு வந்த தன
துப் பேசிய பேச்சல்

1967-ம் வருட
களில் எத்தனைப் பே
கிறார்கள்? இவர்களி
வருடத்திய நாடாளு

கேட்டுக் கொ
இன்றைக்கு மத்திய
கள்?

"இந்தச் ச
பெறுவிட்டால்,
ரப்பிரதேசம் மு
ஏற்படும்; இரயி
நடைபெறுது."

என்று அச்சுறுத்தல்
வோடு வெளியிடுகி

ளது தனியுடைமையா என்றே
ு.

ன் மூலம், நேருவின் வாக்குறுதி
காள்ளப்படவில்லை. இந்திக்காரர்
பல பிரிவுகளைக் கொண்டிருக்கிறது
பகுதி மக்களது விருப்பத்தை அது
ற்றவில்லை. என்றாலும் இந்தி பேசு
ச்சல் கிளப்பவேண்டும் என்பதே
றது. அல்லாமல் இந்தி பேசும்
ச்னையில் தலையிட்டுப் பேச உரிமை

யில் இந்திக்காரர்களது தலையீடு
ால்கிறார்?

ve English as an alter-
as long as the people
d I would leave the
o Hindi-knowing peo-
e non-Hindi-knowing

க்காரர்களது தலையில் சம்மட்டி
க்கிறார்?

த ஒரு மாற்று மொழியாக,
த்தனைக் காலம் தேவையென
, அத்தனைக் காலம் வரை
ன் விரும்புகிறேன்; இது
் நான் இந்தித் தெரிந்
டமாட்டேன்; இந்தி
டமே விடுவேன்."

ப்படுகின்ற முடிவில் இந்திக்
் மாட்டேன்; இந்தி பேசாதவர்
என்றல்லவா நேரு கூறி இருக்
ளவையில்! 1959-ம் ஆண்டு
ளர்.

ன் எட்டாவது பிரிவில் ஆங்
மாழிகளில் ஒன்றாகச் சேர்க்க
பிராங் அந்தோணி அவர்கள்
் தீர்மானத்திற்குப் பதிலளித்
-!

ய நாடாளுமன்ற உறுப்பினர்
இதனை அறிந்து வைத்திருக்
த்தனைப்பேர் 1959—1962ம்
ற உறுப்பினர்கள்?

ருந்தவர்களில் எத்தனைப்பேர்
ின் அமைச்சராக இருக்கிறார்

ந்திருத்தத்தைத் திரும்பப்
கவிடாவிட்டால் உத்தி
ும் பயங்கர விளைவுகள்
ாக்குவரத்து ஒழுங்காக

மக்களவையிலேயே துணி
அளவுக்கு இதில் இந்திக்

காரர்கள் தலையீடு ஏற்பட்டிருப்பதனை—எதற்காக மத்திய அரசு பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஆங்கிலம் பற்றிய தீர்வை, இந்திக்காரர்களிடம் விடமாட்டேன்

என்று 1959ல் நேரு கொடுத்த பாராளுமன்ற உத்திர வாதம் என்ன ஆயிற்று?

இந்திக்காரர்களிடம் விடமாட்டேன் என்ற அவரது உத்திரவாதத்துக்கு இன்னொரு சட்டம் தேவை என்று இந்தி பேசாதோர் சிந்திக்கவேண்டிய சூழ்நிலையைத்தான் இந்தி வெறியர்கள் ஆட்சிமொழிச் சட்டத் திருத்த விவகாரத்தில் தங்களை ஆக்கிக்கொண்டிருக்கிறார்களே அல்லாமல், நேரு என்று ஒருவர் இருந்தார்; இவர் இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் பதவியில் அமர்த்தப்பட்டிருந்தார்; அந்தப் பிரதமர் இந்தி வெறியர்களின் உள்மனம் கண்டு வெதும்பி, இந்தி பேசாத மக்களது மொழிப் பாதுகாப்புக்கு சிலபல வாக்குறுதிகள் தந்தார்—என்பதனைப் புரிந்துகொண்டு செயல்படுவதாகத் தெரியவில்லை.

'நேற்றைய பேச்சு நேற்றோடு' என்பதுபோல்தான் உத்திரவாதங்களும், வாக்குறுதிகளும் மதிக்கப்படுகின்றனவேயொழிய, இந்தி பேசாத பகுதியில் உள்ளவர்கள் மனிதர்கள்தான் என்றோ, அந்த மனிதர்களுக்கு சிந்தனையும் அறிவும் இருக்கிறது என்றோ, அவர்கள் எல்லா வகையான ஆசாபாசங்களுக்கும் இலக்காகுபவர்கள்தான் என்றோ இந்தி பேசுவோர் நினைக்கிறார்களா என்ற ஐயம் எழுகிறது.

நேருவையும், அவரது வாக்குறுதியையும் மதிக்கும் நோக்கமுடையவர்களானால், ஆங்கிலம்பற்றிய பிரச்சினையில் இந்திக்காரர்கள் ஒதுங்கி வழிவிட்டு நிற்கவேண்டுமேயொழிய, அச்சுறுத்தல் அளவுக்குத் துடித்துக் கொண்டிருப்பது முழுமையான முட்டாள்தனமாகும்.

இந்திமொழிக்குச் சொந்தக்காரர்கள் என்று எப்போது ஆயினரோ, அப்போதே — அந்த மொழிபற்றிய அரசாங்க விவகாரத்தில் அவர்களது தலையீட்டைத் தடுத்திருக்க மத்திய அரசு முன்வந்திருக்க வேண்டும்.

இந்தியை ஆட்சி மொழி என்று மத்திய ஆட்சி ஏற்றுக்கொண்டபோது, கைகொட்டி ஆரவாரித்து மகிழ்ந்த அளவுக்கு இந்தி பேசாதோர் மகிழ முடியுமா?

தங்கள் மொழி ஆட்சி மொழி என்ற பூரிப்பு இந்திக்காரர்களுக்கு இருக்கக்கூடும்.

இதே போல் வங்காளிகள். வங்காள மொழிதான் ஆட்சி மொழியாக வேண்டுமென்று கிளர்ந்தெழத் தொடங்கினால்?

மராத்திதான் ஆட்சி மொழியாக ஏற்கப்பட வேண்டுமென மராத்தியர்கள் போராட ஆரம்பித்தால்?

தெலுங்குக்குதான் அந்த அந்தஸ்து தேவை என ஆந்திரா குரலெழுப்புமானால்?

கன்னடத்துக்கு அந்த வாய்ப்பைத் தாருங்கள் என்று கர்நாடகம் கிளர்ந்தெழுந்தால்?

தமிழுக்குதான் தரப்பட வேண்டும் அந்த இடம்—அதற்கு இது இது தகுதிகள். இந்தி பிறப்

(14-ம் பக்கம் பார்க்க)

கற்பு--காட்டுமிராண்டி!

— பழநி —

அன்புள்ள நண்பா!

வாய்ப்பு—என்ற அந்த ஒன்று இருக்கிறதே, அது ஒரு வேடிக்கையான நிலை. வாய்க்கப்படுவதனாலேயே அது வாய்ப்பு என்ற பொருளாயிற்று. வழங்கப்படுவன எதுவும் வாய்ப்பு என்ற தலைப்பில் இடம்பெறத் தக்கவை அல்ல வாய்ப்பு என்பது தேடிப்பற்றுவதும் அல்ல. இயல்பாக வாய்க்கப்படவேண்டும். அப்போதுதான் அது வாய்ப்பு என்ற சொல்லாட்சிக்கு உரியதாக அமையும் என்பர் ஆன்றோர்.

செய்திகளைச் சேகரித்துத் திரட்டித் தருவது என்பதை எந்த வகையிலும் வாய்ப்பு என்று கூறிவிட முடியாது. நீ டெல்லிக்குச் செல்கிறாய். அங்குதானே இந்தியப் பிரதமர் இருக்கிறார்! நீ செல்வது ஏதோ ஒருகாரியத்துக்காக. சென்ற இடத்தில் பிரதமரைச் சந்திக்கவும், அவருடன் அளவளாவிப் பேசி மகிழவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், நிச்சயம் இழக்கச்சம்மதிக்கமாட்டாய். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள நீ விரும்பவே செய்வாய். இப்படி நிகழ்ந்தால்தான் அது வாய்ப்பும் ஆகும். பிரதமரைச் சந்திக்கவென்றே சென்றுவிட்டு, சந்தித்து உரையாடி மீண்டு, 'நான் பிரதமரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன்' என்று பேசினால், அது தவறான சொல்லாட்சியாகும். வாய்ப்பு என்றால் என்ன என்பதன் பொருளை அறியாமல், இதுதான் வாய்ப்பு என்று ஏதோ ஒன்றுக்குத் தவறானபொருள் கொண்டிருகிற நிலையாகும் அது.

இந்த வாய்ப்பு சில பல வேளைகளில் எங்கெங்கோ கிடப்பவரை, எங்கெங்கோ தூக்கி எறியும். உச்சியிலிருப்பவர் பாதாளத்தில் தள்ளப்படுவதும், ஆழமான பள்ளத்தில் கிடப்பவரை கோபுர உச்சிக்குக் கொண்டு வைப்பதும் வாய்ப்பு' என்ற அந்த சக்திக்கு உண்டு.

இதனாலேதான் நண்பா, வாய்க்கப்படுவதனால் அது வாய்ப்பு என்றாயிற்று என்றேன்.

ஒரு நாள் ஏடொன்றைப் புரட்டிக்கொண்டிருந்தேன். அப்போதுதான், அதில்தான் இந்தக் கடிதத்தை உனக்கு எழுதும் 'வாய்ப்பு' எனக்குக்கிடைத்தது. அந்த வாய்ப்பினை, வழங்கியது அந்த ஏடுதான்.

ஆனால் வாய்ப்பு, வழங்கப்படுவதில்லை என்றும் கூறிவிட்டு, இப்போது வாய்ப்பினை வழங்கியது அந்த ஏடு என்று முரண்படக் கூறுகிறாயே என்று நினைக்காதே நண்பா! வழங்கப்பெற்று பெறுவது வாய்ப்பாகாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இங்கே வழங்கியது என்பதன் பொருள் முன்னர் கூறப்பட்ட வழங்குதல் என்பதினின்றும் எத்தனையோ படிகள் மாறுபட்டது.

'கற்பு'—என்ற ஒரு சொல் இப்போது உலகத்தில் பரவலாக விமர்சிக்கப்படும் தன்மையை எட்டிப் பிடித்திருக்கிறது என்பதை நீ அறிவாய். தமிழகமும் அதற்கு சளைத்ததாயில்லை. ஏடுகள்மூலம் மட்டும் அல்ல—எண்ணத்தால்—எழுச்சியால் உணர்ந்துகொண்டுள்ள அதன் பொருளுக்கு இன்று விமர்சனங்கள் வரத் தொடங்கியுள்ளன.

நாட்டின் சிறப்பை வளத்தை, நாகரிகத்தையெல்லாம்கூட இந்த 'கற்பு' என்ற சொல்லின் விளக்கத்திற்கு முட்டுக் கொடுக்க வருவோரும் உண்டு. அந்த 'கற்பு'பற்றிய ஒரு செய்தியை அந்த இதழில் கண்டேன். அதோடு தொடர்புகொண்டிருந்த இன்னொரு சொல்லாட்சி 'காட்டுமிராண்டி' என்றும் இருந்தது.

அப்போதுதான் நண்பா எனக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது!

கற்பு—காட்டுமிராண்டி

கற்பு—காட்டுமிராண்டி

கற்பு - காட்டுமிராண்டி

இப்படி மெள்ள, அழுத்தமாக, இன்னும் அழுத்தமாகச் சொல்லிப் பார்த்தேன், சிரிப்புதான் வந்தது!

* * *

காட்டுப் பிரதேசத்தையடுத்த பொட்டல் பகுதி வெகு தூரத்துக்கு அப்பால் ஒழுங்கற்ற முறையில் கழிகளாலும், காட்டுத் தழைகளாலும் ஒன்றோடு ஒன்று வைத்துச் செருகப்பட்ட கூடுபோன்ற வீடமைப்புக்கள். பாதை என்று சொல்ல முடியாவிட்டாலும், அடிக்கடி நடந்து போய்வந்த—தடங்கள்—வழிகளாக இருந்தன. பாறைச் சிதறல்கள் விரவிக்கிடந்தன. கரடுமுரடான தடம். நல்ல வெயில்.

நிர்வாணத்தோடு இளம்பெண் ஒருத்தி இரு கைகளையும் லாவகமாக வீசிக்கொண்டு ஏதோ ஒருவிதமாக நடந்து வருகிறாள். இன்றைய எழுத்து நடைப்படி அந்த நடையை 'ஒயிலாக' என்று எழுதிக் காட்டிவிடலாம். அது ஒயிலா, வேறு எதுவுமோ என்று அவளுக்குத் தெரியாது. ஏதோ நடக்கிறாள் அவ்வளவுதான்!

அரை ஆடையில்லை; மேலாடையில்லை. ஏன் அவை இல்லை என்றும் அவளுக்குத் தெரியாது. பிறந்தது முதலே அவள் அப்படித்தான் இருக்கிறாள். அவள் மட்டுமென்ன? அவளது அன்னையும் அப்படித்தான்.

தாயை, அவள் தாய்-என்றோ தாய்மை உள்ளவள் என்றோகூட எண்ண முடிந்தவளும் அல்லள். தன் போன்று அவள் இருக்கிறாள். அவள் அன்னைக்குப் பிறந்த பிறரும் அப்படித்தான் இருக்கிறார்கள். சிலர் ஆண்கள். சிலர் பெண்கள். உறுப்பு வேறுபாடுகள் கொண்டு அவர்களைப் பிரித்து அறிந்துகொண்டிருக்கிறாள்.

தாயின் காதலர்களை அவளும் காதலித்திருக்கிறாள். தன் காதலர்கள், தாயைக் காதலித்துக்கொண்டிருப்பதையும் அவள் கண்டிருக்கிறாள், அதெல்லாம் ஏன் என்றும் அவளுக்குத் தெரியாது.

பால் மாறுபாடுடைய இருவர் ஏனோ ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்கின்றனர். ஆடுகின்றனர். பாடுகின்றனர். கூடுகின்றனர்.

இது ஆடலா, அதுதான் பாடலா என்றெல்லாம் கூட அவள் அறியமாட்டாள். திவா என்று அவளை அழைப்போம்.

திவா நடந்து வருகிறாள். வெய்யிலில் நடந்து வருகிறாள். வியர்வை முகத்தில் வழிந்து மேலெங்கும் தெறித்துக்கொண்டிருக்கிறது.

காடாரம்பம். சில சிறு செடிகொடிகள். சுற்றிலும் பாறைச் சிதறல்கள். அதனையும் கடந்து செல்கிறாள் திவா. உயர்ந்தோங்கி நின்ற காட்டுமரம் ஒன்று. சுற்றிலும் பல்வண்ணப் பூச்செடிகள். காட்டு மலர்ச் செடிகள் அவை. சிலவற்றிற்கு மணம் உண்டு. சிலவற்றிற்கு இல்லை. அதனைக் கடக்கும் நிலை, திவாவுக்கு

"திவா, திவா, இங்கே வாயேன்!"

என்ற குரல் கேட்டு நிற்கிறாள். பயந்துபோய் அல்ல; பயம் என்றாலும் அவளுக்குத் தெரியாது. யார் என்று அறிவதற்காக! திரும்பிப் பார்க்கிறாள். காட்டுமரத்தின் அடியில் ஒரு பாறையின்மீது சிவா அமர்ந்திருக்கிறான்—நிர்வாணமாகத்தான்!

உருண்டு திரண்ட சதைத்திரள்கள். கரடுமுரடான தேகம். வாட்டசாட்டமான உயரம். காளைப் பருவத்தான் என்றுஎழுதிக்காட்டலாம். அவன் அங்கே அமர்ந்திருக்கிறான்.

திவா, அவனை நோக்கி வருகிறாள். உட்கார்ந்திருந்த சிவா அவளை நோக்கிப் போகிறான்.

"வெயில் ரொம்ப அதிகமில்லே" என்கிறான். அவன் கைகளில் கொத்துக் கொத்தான காட்டுமலர்கள். பலவண்ணப் பூக்கள். அதனையே இமைக்காமல் பார்க்கத் தொடங்கிய திவாவிடம், அம்மலர்களை நீட்டி "இந்தா திவா இவைகளினால் கொஞ்சம் விசிறிக்கொள்! இதமாக இருக்கும்" என்று அவளது கரங்களில் அவற்றைத் திணிக்கிறான். அவளது இடுப்பைச் சுற்றி அவன் கரத்தைக் கோத்து இழுத்துவந்து அந்தப் பாறைமீது உட்காரவைத்துவிட்டு, அதன் அருகே கீழே கிடந்த அவனுடைய வில், அம்புகளை எடுத்துக்கொண்டுவந்து அவளுக்கு எதிரே நிற்கிறான்.

பாறையில் அமர்ந்தபடியே, மலர்களை முகர்ந்தபடி 'எவ்வளவு அழகாகவும் மணமாகவும் இருக்கின்றனதெரியுமா, சிவா?' என்கிறாள் திவா.

"இங்கிருந்து உன் அழகைப் பார்க்கிறேன் திவா! நீ சிறுமியாயிருந்தபோது, குளிரில் என்னைக்கட்டிப் பிடித்துக்கொண்டு என் இதழ்களில் முத்தமிட்டாய் அல்லவா! அது என் நினைவுக்கு வருகிறது. இப்போது நீ எனக்கு வேண்டும் திவா" என்கிறான்.

மலர்களைக் கீழே போட்டுவிட்டு எழுந்து சென்று சிவாவை இறுக அணைத்துக்கொள்கிறாள். இதழ்களோடு இதழ்கள் இணைகின்றன. சில விநாடிகள் அப்படியே நீடிக்கிறது. அப்புறம்? அங்கே அந்த மரத்தடியிலேயே உறவுகொள்ளத் தொடங்கிவிடுகின்றனர். ஆமாம்! உடலுறவு!!

முடிகிறது. திவா எழுந்து, சிவாவின் மேல்சாய்ந்துகொண்டே திஸ்ரனைவிட நீ இனிக்கிறாய் சிவா. திஸ்ரன் ஒருமிருகம்! என்கிறாள். பதிலுக்கு சிவா அது எப்படியோ திவா! ஆனால் நீ உன் அன்னையைவிட எனக்குப் பிடித்திருக்கிறாய் என்கிறான். மீண்டும் இதழ்கள் எச்சிலாகின்றன.

* * *

நண்பா! சிரித்தேன் என்று கூறியதற்கு இப்போது காரணம் புரிகிறதல்லவா! சிவாவும் திவாவும் காட்டுமிராண்டிகள்! 'கற்பு' அங்கே எப்படிப்பட்ட கலையாக இருந்தது என்பதனைக் கண்டாயல்லவா! இன்றைக்கு 225 தலைமுறைகளுக்கு முன்னால் அதாவது 5500 ஆண்டுகளுக்கு முன்பு அகிலத்தின் குடும்பம் இப்படித்தான் இருந்தது என்ற வரலாறுதான் இங்கே கதை வடிவில் தரப்பட்டிருக்கிறது.

கற்பு—காட்டு மிராண்டி என்பதனைப் புரிந்துகொள்ள இது போதாது என்கிறாய். சரி, இன்னொன்றைப் பார்!

* * *

காடு; அதனையடுத்த காட்டாறு—அதற்குப் பக்கத்தில் பொட்டல் நிலம். சுமாரான வசதியுடன் வேயப்பட்ட குடில்.

குடிசையின் எதிரில் ஒருவன் மர ஆடை தரித்தவனாய்க் குத்திட்டுக்கொண்டு அமர்ந்த நிலையில் எதிரே ஜுவாலைவிட்டு எரிந்துகொண்டிருந்த நெருப்பில் மாமிசத் துண்டுகளை இரும்பு ஆயுதத்தில் குத்திச் சுட்டுக்கொண்டிருக்கிறான். அருகில் அவனது மக்கள் சிலர் அமர்ந்து அதனை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அவன் மனைவி சுட்ட துண்டங்களை ஒரு இரும்புச் சட்டியில் எடுத்து வைத்துக்கொண்டு, அவனுக்குப் பக்கத்திலே அமர்ந்திருக்கிறாள். ஆமாம்! மரவுரிதான் தரித்துக்கொண்டிருக்கிறாள்.

அவனை அமிர்தன் என்று வைத்துக்கொள். அவளை சோமா என்று கூப்பிடு. அமிர்தன் மாமிசத் துண்டிலிருந்து ஒழுகும் கொழுப்புச்சத்தினை உறிஞ்சியபடியே அவளைத் திரும்பிப்பார்க்கிறான். அவளும் அப்படித்தான். சதைப் பிண்டத்தைக் கடித்துச் சுவைத்துக்கொண்டே, சில துண்டங்களை அவர்களது பிள்ளைகள் பக்கம் வீசியெறிகிறாள். அவைகள் ஓடியெடுத்துவந்து அவற்றைச் சுவைக்கின்றன.

ஊன் உணவு! அமிர்தனை உள்ளம் கெடவைக்கிறது. அவ்வளவுதான் அங்கேயே திருவிளையாடல்!!

திருவிளையாடல் முற்றுப் பெறவில்லை. அமிர்தனது நண்பன் அல்லது சோமாவினது காதலன் எதிர்பாரா

மல் அங்கு வந்து விடுகிறான். 'விளையாட்டு' முடிவுறு முன்பே அமிர்தனை விலக்கித்தள்ளுகிறாள். தள்ளிவிட்டு "வா திஸ்ரன்! எவ்வளவு நாட்களாயிற்று உன்னைப் பார்த்து! வா! உன் இனிமையான உதடுகளால் எனக்கு ஒரு முத்தம் கொடு! சீக்கிரம்வா திஸ்ரன், என்னை சீக்கிரம் உன்மீது போட்டுக்கொள்!" என்கிறாள்.

அமிர்தன் — சோமா இணை, இப்போது திஸ்ரன்— சோமா இணையாகிவிடுகிறது. திஸ்ரனின் அணைப்பிலிருந்தபடியே சோமா, கணவனைப்பார்த்து—போயேன் உள்ளே! மது, குடம்குடமாக வைத்திருக்கிறேன். எடுத்துக் குடி! இன்று நம் விருந்தாளியாக திஸ்ரன் வந்துவிட்டானே! இன்றைக்கும் நாளைக்கும் நான் திஸ்ரனுடையவள்!! போபோ! போய்க் குடி!!—என்கிறாள்.

எரிந்து கொண்டிருந்த நெருப்பில் வேகாத குதிரை மாமிசத்தை மொத்தமாக எடுத்துப் போட்டுவிட்டு அவன் உள்ளே போகிறான். குடிக்கிறான். மயங்கி வீழ்கிறான். சோமாவும் அப்படித்தான். திஸ்ரனது அணைப்பிலும், அன்பிலும் மயங்கிவிழுகிறாள்!

* * *

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனித குல வரலாறு இது. ஆமாம்! காட்டுமிராண்டிக் காலத்து மனித வாழ்க்கை! கற்பு நெறி என்பதோ, வாழ்க்கை முறை என்பதோ வகையாக தொகைப்படுத்தப்படாத காலத்திய வரலாறுதான்!

நண்பா! இரண்டு கதைகளையும் சுவைத்தாயல்லவா! சுவைத்தாய் என்பது தவறு! முகஞ் சுளித்திருப்பாய் என்பது எனக்குத் தெரியும்! இவை, வரலாறுகள் தான் நண்பா! வரலாற்றினைத்தான் இங்கே கதையாகக் காட்டியிருக்கிறேன்!

நான்கூட காட்டவில்லை! வடபுலத்து வரலாற்று அறிஞர் இராகுல சாங்கிருத்தியாயன் என்பவர் காட்டி இருக்கிறார் நமக்கு, 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலில்!

மனித குலம் தோன்றி வளர்ந்து குடும்பமாய், சமுகமாய், நாடாய் வாழத்தொடங்கிய வரலாற்றை சுவைபட கதை வடிவில் தந்திருக்கும் நூல் அது. அவற்றில் சில எடுத்துக்காட்டுக்கள்தான் நீ கண்டவை. கொஞ்சம் மூடி மறைத்து எழுதியிருக்கிறேன். பெயர்களைப் படிக்க சலிப்பு ஏற்படாமலிருப்பதற்காக சிறிது மாற்றி இருக்கிறேன்!

'கற்பு' என்பதுபற்றியோ 'காட்டுமிராண்டி மொழி, என்பதுபற்றியோ நான் பார்க்காமல் விட்டிருந்தால், இதனை எழுதிக் காட்டும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்காதல்லவா! கடிதத் தொடர்பை விட்டுவிட நினைத்த எனக்கு இது வாய்ப்புத்தானே!

நண்பா, காட்டுமிராண்டித்தனம் என்பதுடன் கற்பும் இணைந்திருக்கிறது இதனில்! ஆனால் காட்டுமிராண்டி மொழி என்பதனைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

5500-ஆண்டுகளுக்கு முன்போ, 3000 ஆண்டுகளுக்கு முன்போ மனித குலம் நீ கண்டமுறையில் இருந்திருக்கிறபோது, இங்கே, தமிழ்நாட்டில் எப்படி இருந்தது தெரியுமா!

நாகரிகம் சிறந்து விளங்கியதாம். கடல்வாணிபம் நடைபெற்றதாம்! கற்பு நெறிகூட பேணப்பட்டதாம்!

தமிழ்மொழியின் வயதினை இதுவரையில் யாரும் நிர்ணயித்தோ-யூகித்தோகூட காட்டவில்லை-கோடிட்டுக் காட்டியதுகூட இல்லை. இந்த அளவு இருக்கலாம் —என்று 'லாம்' போட்டு சிலர் கூறியிருக்கிறார்கள்.

விலங்கு முதலியவற்றின் குரல்களைக்கூட வேறுபடுத்தி உணரமுடியும். வீதியில் கேட்கின்ற ஒரு பசுவின் குரலைக்கேட்டு, இது நம்வீட்டுப்பசு—அல்லது நம்முடையதல்ல என்று நம்மால் உணர முடிகிறதல்லவா! இதேபோல மக்களது குரலையும்கூட இது இன்னார் குரல், இது அவரது குரல் என்று கண்டுணர முடியும் அல்லவா! அதுபோல-

மொழியின் பிறப்புக்கு வேர், முதன்முதலாக குரலாகத்தான் இருந்தது என்றும் இந்த 'ஒலி'தான் சுட்டுவதை உணர்த்தத்தக்க வகையில் பல்வேறுமுறையில் ஒலிக்கப்பட்டதாகவும், அவ்வாறு ஒலிக்கப்பட்ட ஒலியைத்தான் காலமும், வளர்ந்த அறிவும் ஒருவகைப் படுத்தி 'மொழி' என்று ஆக்கிவைத்தது—என்பதனை மொழிநூல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

> மக்களுக்குத் தம் ஒலியைப் பலவாறு வேறுபடுத்திக்காட்டுவதற்கு வேண்டிய உறுப்பமைதி உண்டு; ஒலியை விருப்பப்படி ஆளுதற்கு உரிய உணர்ச்சி வலிமையும் உண்டு. ஆகவேதான் மக்கள் தம் ஒலியைப் பலவாறு வேறுபடுத்திக் காட்ட இயல்கின்றது.

என்கிறார் கவிராசபண்டித இராமசுப்பிரமணிய நாவலர் அவர்கள்.

முதன்முதலாக மொழி தொகையாக வகுக்கப்பட்டிருக்க முடியாது. ஒலிக் கூட்டங்களே மொழியாக ஆகி இருக்கவேண்டும்.

(11-ம் பக்கம் பார்க்க)

அறிஞர் அண்ணா
அவர்களின் கருத்துக்கள்
கதை வடிவில்
நாடக வடிவில்
கட்டுரையாக
கவிதையாக
எதுவாக இருந்தால் என்ன?
பொங்கல் மலரிலிருந்து
'காஞ்சி'யில்
தொடர்கதை
வடிவில் தொடங்குகிறது!

எச்சில் பரிசு

-[துறவி]-

தரைமணலில் அனல்பற்றும் வெய்யில் நேரம்
தொழில்கருதி ஆடவர்கள் விரையும் நேரம்
கருமையினுல் கோடிட்டு, மீன்கள் அல்ல
கண்கள்தான் எனக்காட்டும் பெண்கள், வேர்வை
அரும்புபல முகமலரில் படிய செந்தீ
அடுப்படியில் சமைக்கின்ற நேரம்; மக்கள்
நெருக்கமுற்ற சாலையிலே வந்து நின்று
நெடுமாடச் சேவகர்கள் இருவர், வெந்த

முட்டைதனைக் விண்டுவைத்த தைப்போல் உள்ள
முரசறைந்து கூட்டத்தைத் தம்முன் சேர்த்தார்
எட்டி எட்டிச் சென்றேரும் அரசாங் கத்து
எச்சரிக்கை குரலொலியைக் கேட்டுச்சற்றுக்
கிட்டத்தில் வந்துநின்றுர் விழியில் நெஞ்சில்
குறுகுறுப்பும் பெருவியப்பும் நிழலாய் மண்ட
தொட்டவுடன் நாணுகின்ற பெண்கள் வீட்டுத்
தலைவாசல் வரைவந்து கவனித் தார்கள்.

நீட்டோலை தனைஎடுத்துத் தனக்கு முன்னே
நின்றிருக்கும் மக்களிடம் படித்தான் வீரன்;
"நாட்டோரே! நமதருமை மன்னர் செல்வி
நீலஇருள் நிலாப்போன்ற எழிலி, ஞானப்
பாட்டோலை பலபடித்த புதல்வி, உள்ள
பயன்கலையில் முதிர்ந்திருக்கும் குமரி, யாழில்
ஒட்டிவிரல் இசைவளர்க்கும் கலையில் தேர்ந்த
ஒப்புயர்வு இல்லாத அழகி யாவார்!

காந்தர்வ தத்தைஎன்னும் பெபரைக்கொண்ட
காவலரின் இளவரசி தனைம ணக்க
வேந்தர்கள் பலபேர்கள் நமது கோட்டை
வாசலிலே தழுமிவிட்ட போது வாளை
ஏந்துகின்ற படைமன்னன் அவர்க ளுள்ளே
ஏற்றவரை தேர்ந்தெடுத்து மணம்மு டிக்க
காந்தர்வ தத்தையுடன் யாழ்வா சிக்கும்
கல்யாண இசைப்போட்டி ஒன்றை வைத்தார்.

பிறநாட்டு இளவரசர் பலபேர் இந்தப்
போட்டியிலே பங்கேற்றுத் தோற்றுப் போனுர்!
நிறைஞான சங்கீதப் போட்டி யில்யாழ்
நரம்பிசைத்து வெற்றியினை அடைப வர்க்கு
அறவேதம் ஒலிக்கின்ற பந்த லின்கீழ்
அன்பளிப்புத் திருமணத்தை முடித்து வைத்துத்
திறமைக்குத் தன்மகளைப் பரிசி லாகத்
தந்திடுவார் நமதுமன்னர் அறிவீர் இஃதே"

எனவார்த்தை அறிவிப்புச் செய்த வீரர்
இதழுக்கு ஓய்வளித்து நகர்ந்து சென்றுர்
மனக்கண்ணில் அப்போதே யாழ்மி ழற்றும்
மயில்சாயல் காந்தர்வ தத்தை யாளை
இனிமையொடு தரிசித்த வாலி பர்கள்
இசைப்போட்டி யில்கலந்து அவளை வென்று
பனிமுத்த திருமணத்தை முடிப்ப தைப்போல்
பகற்கனவில் மிதந்தபடி கலந்து போனுர்!

மணிமாட மண்டபத்தில் தினமும் வேற்று
முடிமன்னர் பலர்வந்து பொருத லானுர்
துணிக்கோலம் ஆபரண அழகுக் கோலம்
தன்நாட்டுக் கொடிக்கோலம் விருது கோலம்
இணையற்ற மறக்கோலம் யாவும் பூண்டு
இளவரசி உடற்கோலம் தரித்து இன்பப்
புணர்கோலத் திருமணத்தைச் சுவைக்க பாட்டுப்
போட்டியிலே அனைவருமே கலந்து கொண்டார்!

விழிக்கோணம் வாலிபத்துப் பார்வைக் கோணம்
வேலாக ஊடுருவும் சிரிப்புக் கோணம்
இழிந்துவரும் நீரருவி மலையைப் போன்று
இடுப்பொடிந்துப் புடைத்தெழுந்த மார்பு கோணம்
அழகான நடைகோணம் காட்டி யாழின்
ஆனந்த சங்கீத இசையை மீட்டி
எழும்இசையால் காந்தர்வ தத்தை தன்னை
எடுத்தணைக்க வந்தாரை முறிய டித்தாள்!

செருக்களத்தில் கோலிவாளை பிடிக்கும் அந்தச்
சேனைமன்னர் இளங்கூட்டம் இச்சை யோடு
சுருங்கியுள்ள காந்தர்வ தத்தை யின்றால்
சிற்றிடையைத் தொடுவதற்கும் எச்சில் முத்தம்
தருவதற்கும் பெறுவதற்கும் ஆசை கொண்டு
துடிதுடித்தார் அதனுலே அரிசி யோடு
விரல்கொஞ்சும் யாழ்ப்போட்டி யில்க லந்து
வெட்கமுடன் எல்லோரும் தோல்வி புற்றுர்!

எத்தனையோ வெங்களத்தில் அச்ச மின்றி
எதிரிகளை வென்றிருப்பார், பளப ளக்கும்
கத்தியினுல் எண்ணற்ற உடலை வெட்டிக்
குருதியிலே திலகத்தை இட்டி ருப்பார்,
குத்தீட்டி யா?அம்பா? எதுஎன் றாலும்
குறியோடு எறிகின்ற அவர்க ளெல்லாம்
மைத்தடங்கண் இளவரசி யாள்யா ழின்முன்
மடல்வாழைப் பூப்போலக் குனிந்து போனுர்!

சதைமேனி ஒப்பனையில் மோகம் கொண்டு
சிற்றின்பச் சுகத்திற்கு வேகம் கொண்டு
அதிகார இளவரச வம்சம் கட்டில்
அணைப்பிற்கும் இனிப்பிற்கும், மானம் கெட்டுப்
புதுமங்கை இசைநங்கை முன்னுல் சண்டை
போர்க்களத்தில் ஒடிந்துவிட்ட வாள்போல் ஆனுர்
எதற்காக அவளிடத்தில் தோற்க வேண்டும்
எல்லாமே சிற்றின்ப மயக்கம் தானே?

சீதத்தன் வளர்ப்புமகள் கலுழ வேகன்
சித்திரித்த சொந்தமகள் இசைக்கும் யாழின்
நாதத்தை எதிர்க்கின்ற கீதம் தன்னை
நரம்பதிர மீட்டிடுவோர் யாரும் இல்லை
சாதனையாய் எதைஎதையோ செய்யும் கத்திச்
சமர்வீர இளவரச ரெல்லாம் யாழால்
வாதமிட்டுக் காந்தர்வ தத்தை யாளை
வெற்றிகொள முடியாமல் தோற்றே போனுர்.

பொன்வேய்ந்த மணிமகுடம், மேகக் கூந்தல்
பூவின்முன் தோற்றுவிழும் அவலம் போலும்
இன்னிசையாய்ச் சப்தமிடும் வளைக ளின்முன்
இரத்தத்தில் நனையும்வாள் பணிதல் போலும்
சின்னஇடை காந்தர்வ தத்தை மீட்டும்
சங்கீதப் பாடலினை வெல்லும் பாடல்
ஒன்றேனும் இசைப்பதற்கு இயன்றி டாமல்
ஒப்புக்கொண் டார்தோல்வி, மலைத்தோள் வீரர்!

கல்யாண இசைப்போட்டி தனைக்கு றித்துக்
கேள்வியுற்ற கந்துகடன் என்ற சீமான்
செல்வபிள்ளை சீவகன்,யாழ்ப் போட்டி தன்னைச்
சந்திக்க தந்தையிடம் ஒப்பம் கேட்டான்
சொல்ஒப்பம் மகனுக்கு அளிக்க அந்தச்
செல்வந்தர் மனம்குழம்பித் தயங்கி நின்றுர்
வெல்லுகின்ற இசைப்புலமை நிறைந்த மைந்தன்
வற்புறுத்தி விடைபெற்றுப் புறப்பட் டானே!

சீவகனின் வருகையினைக் கண்டு அங்கு
சேவகம்செய் வாரெல்லாம் கேலிப் பார்வைத்
தாவிபெழ வரவேற்று, அனுதா பத்தால்
ததும்பிவரும் குறுஞ்சிரிப்பால்நகைத்துக்கொண்டார்
ஆவலினுல் உந்தப்பட்டு அவர்கள் சூழ
அமைதியொடு சீவகனே உள்நு ழைந்தான்
ஏவலர்கள் இவன்வருகை எடுத்துக் கூற
இகழ்ச்சியொடு சீதத்தன நகைத்து வந்தான்!

இதழ்உறையில் விழிக்குறிப்பில் கேலி மின்ன
எதிர்நிற்கும் சீவகனை நோக்கி "இங்கு
இதுவரைக்கும் தோற்றவர்கள் நிறைய உண்டு
என்மகளின் இடைத்தழுவும் போதை யாலே
புதுமோக இளவரசர் யாவும் தோல்வி
பெண்மடியில் பிறர்இகழ சாய்ந்து போனுர்
பதில்யாழில் இசைவளர்க்கும் ஆற்ற லின்றிப்
பணிந்திட்டார் அவரெல்லாம் என்ம கள்முன்!

தோற்றவர்கள் எண்ணிக்கை யோடு மேலும்
துணையாகச் சேர்வதற்கு வந்தா யோநீ?
சாற்றிநின்றுன் சீதத்தன் ஏள னத்தால்
சற்றேனும் மதிக்காமல் அவனை; "ஐயா
ஆற்றலினை வடிவத்தால் கணித்தி டாதீர்
ஆரம்ப மாகட்டும் போட்டி" என்று
ஏற்றபதில் சீவகனே விடுத்தான்; போட்டி
ஏற்பாட்டைச் சீதத்தன் துவக்கி வைத்தான்

அலங்கார மாய் காந்தர்வ தத்தை வந்து
அமர்ந்திட்டாள் யாழோடு மேடை மீது
சிலைப்புருவத் துணைவிழியை மெல்லத் தூக்கிச்
செருக்கோடு சீவகனை அளந்தாள் ஏனே
தலைக்கவிழ்த்து நாணநகை பூத்தாள், பின்பு
தொடரவிட்டாள் யாழ்நரப்பில் வளைக்க ரத்தை,
கலையாழின் இசையாலே தோற்றுப் போக
காளைஇவன் வந்தானே எனநி னைத்து!

சீதநிலாக் கதிர்க்கொழுந்து விரலால் யாழில்
சங்கீத ஒலிஎழும்ப வைத்தாள் நங்கை,
பாதிநிலாப் போன்றநெற்றி மேட்டில் வந்து
படருகின்ற கருங்குழலை ஒதுக்கி வைத்து,
சாதனையாய் யாழ்நரம்பை வருடி விட்டுச்
சபையினிலே நாதமழை பொழிய விட்டாள்
கீதத்தைச் செவிமடுத்தச் சபையோ ரெல்லாம்
கேலியொடு சீவகனைப் பார்த்திட் டார்கள்!

இசைஎதிர்ப்புக் காட்டுதற்குத் தனது யாழின்
இசைமூச்சை எழுப்பிவிட்டான் சீவ கன்,கண்
அசைவின்றிப் பார்த்தார்கள் யாழ்ந ரம்பில்
அவன்விரல்கள் இழைகின்ற நளினம் தன்னை,
வசைப்பார்வைத் தன்மீது பதித்தா ரெல்லாம்
வியக்கின்ற அளவிற்கு யாழ்இ சைத்தான்
நிசிநிலவுப் போன்ற நங்கை சீவ கன்யாழ்
நிகழ்த்துகின்ற இசைநதியில் மூழ்கிப் போனுள்!

முதிர்ந்தநிலா மூத்தநிலா வென்று காட்டும்
மண்விளக்கு எத்தனையோ ஒளிர்ந்த போதும்,
கதிர்பரிதி எழுந்துவிட்டால் நிலவு வட்டம்
கட்டாயம் ஒளிமங்கத் தானே வேண்டும்?
இதுவரைக்கும் கர்வ மாய்நு ழைந்து
இறுதியிலே தோற்றவரே மிச்ச மானுர்,
விதிஇதனை திருப்பிவைத்துப் பாடல் யாழின்
வெற்றியினுல் சீவகனே நிமிர்ந்து நின்றுன்!

செருக்கோடு வீற்றிருந்த சீதத் தன், யாழ்
சங்கீதத் திறமையினுல் மகளை வென்று
தருக்கார்ந்த சீவகன்பால் கரத்தை நீட்டித்
தழுவிக்கொண் டான்அவனைப் பெருமை யோடு!
இருள், ஒளியில் சங்கமித்துப் போவ தைப்போல்
இசைத்தோல்வி கண்டமங்கை எதிரே நிற்கும்
வருங்காலக் கணவனின்கண் பார்வைப் பட்டு
வரிக்கோல நாணத்தில் கரைந்து போனுள்!

புகழ்வார்த்தைக் கவிதையினுல் புலவ ரெல்லாம்
பாராட்டிச் சீவகனை வாழ்த்த லானுர்;
'தோகைதோகையாய்ப் பனிமுத்தப் பரிசு தன்னைத்
தரவேண்டும் தனியறையில் நெருங்கும் போது'
சுகச்சிரிப்பு இதழ்வருட இனிமை யாகச்
சிந்தனையை இவ்வாறு வளர்த்த வாறு
முகம்சிவக்க சீவகனை நோக்கிக் கண்ணுல்
மங்கையவள் வாழ்த்துகளைத் தூது விட்டாள்!

பரிசாக உனைத்தந்தார் உனது தந்தை
பாட்டாலே நான்வெற்றி பெற்ற தாலே!
இரவுக்கு இனிமைதரும் அழகே! என்றன்
இசைவெற்றிக் குன்பரிசு என்ன? என்று
விரலாலே காந்தர்வ தத்தை யின்செவ்
விதழிரண்டைச் சீவகனே தொட்டான்; "மங்கை
தரும்பரிசு இதுவேதான்" என்று கூறித்
தன்இதழால் அவன்இதழை எச்சில் செய்தாள்!

அனந்தசயனம் துயிலெழுப்புகிறார்!

—[எஸ். ஆர்.]—

கவர்னர்கள் விவகாரத்தில் வங்காளம் "அரசியல் சூட்"டினைத் தந்திருக்கிறதென்றால் தமது கவர்னர்கள் விவகாரத்தில் பீகார் சிறிது "அரசியல் ஒளி"யினைத் தந்திருக்கிறது.

பெயருக்கேற்றாற்போல் தர்மமோ வீரமோ இல்லாமல் அஜாய்முகர்ஜியின் அமைச்சரவையை தேன் கூட்டைக் கலைத்ததுபோல் கவிழ்த்து விட்டிருக்கும் தர்ம விராவைப்போல் பீகாரிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அனந்தசயனம்ஐயங்கார் அவர்களும் சில பல கருத்துக்களைத் துணிவுடன் சொல்லியிருக்கிறார்.

வங்காளத்தில் தர்மவீரா செய்தது சரியா—தவறா என்று சட்ட நிபுணர்களும் அரசியல் விற்பன்னர்களும் மூளையைக் குழப்பிக்கொண்டு சிந்தனையைச் செலவிடும் இந்த நேரத்தில் பீகார் கவர்னராக இருந்து ஓய்வுபெற்றிருக்கும் அனந்தசயனம் பொதுவாகவே கவர்னர்கள் பதவி பற்றியும் அவர்களுடன் புதுடில்லி வைத்திருக்கும் உறவு பற்றியும் சில உண்மைகளை உள் விவகாரங்களை மனம் திறந்து சொல்லியிருக்கிறார்.

ஐயங்கார் அவர்கள் பேசவேண்டிய சந்தர்ப்பம்-பேசியிருக்கும்நேரம் இரண்டுமே கவனிக்கத்தக்கதாகும்.

பீகாரில் அவருக்குப்பதில் பதவி ஏற்றிருக்கும் நித்யானந்தகனுங்கோ மாநிலத்து அமைச்சரவையால் 'அனுப்பாதீர்கள்" என்று கேட்டுக் கொள்ளப்பட்டவர். ஆனால்அதனைக் கேளாது புதுடில்லி அவரை பீகாருக்கு அனுப்பிவைத்துள்ளது.

மாநில அமைச்சரவை விரும்பாத ஒரு கவர்னரை மத்திய அரசு பீகாரின்மீது திணிக்கிறது.

அதே சமயம் பீகாரினின்றும் வெளியேறும் அனந்தசயனம் கவர்னர்கள் பதவியினைப்பற்றி மட்டுமல்ல; கடந்துபோன காங்கிரஸ் அமைச்சரவையினைப்பற்றியும் சில வருந்தத்தக்க மதிப்பீடுகளைச் சொல்லியிருக்கிறார்.

"காங்கிரசின் 'அமைச்சரவையின் 'சாதனை' என நான் கருதுவது கடந்த ஜனவரியில் நடந்த துப்பாக்கிப்பிரயோகமும் அதன் விளைவாக நடந்த பன்னிரண்டு சாவுகளும் தான்" என்று இழித்துரைத்திருக்கிறார் கவர்னராக இருந்த ஐயங்கார்.

"அதுமட்டுமல்ல; சனநாயகத்தையும் அரசியல் சட்டத்தையும் தான் காக்கவேண்டியது கவர்னர்களது கடமையே தவிர மாநில அமைச்சரவைகளை மத்திய அரசின் விருப்பம்போல் கலைத்துக்கொண்டிப்பதல்ல" என்றும் கவர்னர்கள் செய்ய வேண்டியவைபற்றியும் ஆனால் செய்துகொண்டிருப்பதனைப் பற்றியும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

கவர்னரது அதிகாரம் என்றும் அதன்மூலம் குடியரசுத் தலைவர் ஆட்சி என்றும் 1937 நிலைமைகளுக்குப் பின்னர் அடிக்கடி பேசப்பட்டு வருவது சுற்றியுள்ள நாடுகளைப்போல் இந்தியாவையும் சர்வாதிகாரத்துக்கு ஆளாக்கி விடும் என்று அனந்தசயனம் எச்சரித்திருப்பதனை பதவியிலிருந்து செல்வதனால் பேசும் துணிவான கருத்து என்று மட்டும் அலட்சியப்படுத்தி விடுவதற்கில்லை. பதவியில் இருந்ததனால் பெற்றிருக்கும் 'அனுபவம்' என்றுதான் கவனத்துடன் நோக்க வேண்டியிருக்கிறது.

எல்லா மாநிலங்களிலும் ஒரே கட்சி என்று இருந்தபோது இருந்த மத்திய அரசின் மனநிலை இப்போது வெகுவாக மாறியிருக்கிறது என்பதனைத்தான் அனந்தசயனத்தின் பேச்சு மேலும் ஒருபடி மேலே சென்று எடுத்துக்காட்டுகிறது.

மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமே உள்ள உறவு முறைகள் என்ன — அமையவேண்டிய நடைமுறைகள் எப்படி இருக்கவேண்டும் என்று காங்கிரசல்லாத மாநிலஆட்சிகளின் விளைவாக புதிய சூழ்நிலைகள் உருவாகி வந்திருக்கும்போது அதனை மேலும் குழப்புவதாக இருக்கிறது 67-க்குப் பின்னர் நடந்துள்ள கவர்னர்களது விவகாரங்கள்.

அரசியல் உலகத்தில் அண்மைக் காலமாக உலவிவரும் ஒரு வேடிக்கைப் பேச்சின் அடிப்படையில் குறிப்பிடுவதென்றால் முன்பெல்லாம் "கவர்னர் பதவியா?" என்று அலட்சியத்துடன் கேட்கப்பட்டு வந்த நிலை மறைந்து அச்சத்துடன் பார்க்கும் நிலை வளர்ந்துள்ளது.

டைம்ஸ் ஆப் இந்தியாவின் சித்திரக்காரர் இலட்சுமண் கருத்துப்படி பெரும்பான்மையை நூலிழையில் நட்டவைத்துக்கொண்டிருக்கும் மாநில அமைச்சர்கள் கவர்னர்' என்ற பெயர் கேட்ட மாத்திரத்தில் ஓடி ஒளியும் கேலிக்குரிய நிலை பிறந்திருக்கிறது.

கவர்னர்—மத்திய அரசு—மாநில அமைச்சரவை இடையே உள்ள உறவு என்ன?

சட்டப்படி எப்படி? சம்பிரதாயப்படி எவ்வாறு?

சட்டமன்றத்தைக் கலைக்கும் உரிமை கவர்னருக்கு உண்டா?

கவர்னர் நியமிக்கும் அமைச்சரவை சட்டமன்றத் தலைவருக்குக் கட்டுப்பட்டதா?

கட்சி மாற்றம்பற்றி நடவடிக்கை எடுக்க கவர்னருக்கு உரிமை உண்டா?

கவர்னர் மத்திய அரசினின்றும் சுதந்திரமாக இயங்குகின்றாரா?

என்பன போன்ற கேள்விகளெல்லாம் நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் விளைவாகத் தோன்றியுள்ளன.

இதில் சட்டம்—சம்பிரதாயம் ஒருபுறம் இருந்தாலும் மக்களது தூற்றல் — பழிச்சொற்களுக்கு ஆளாக நேருமே என்பதற்காகவேனும் எதிர்கட்சி நிர்வாகத்தில் இயங்கும் மாநில அரசுகளிடம் சற்று அதிகமான எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டிய தார்மீகப் பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு.

ஆனால், இராஜஸ்தான் மத்தியப் பிரதேசம், வங்காளம்; பஞ்சாப், அரியானா என்று பட்டியல் நீண்டு விடுவதனையடுத்துத்தான் அனந்தசயனம் போன்றவர்கள் துயிலெழுப்பக்கூடிய கருத்துக்களை தெரிவிக்க நேரிடுகிறது.

7-ம் பக்கத்தொடர்ச்சி

மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில் அவனது சூழலுக்குத் தேவையான ஒலி—மொழிகள் முதலில் உருவாகி அதனையொட்டிச் சிலவும், அவற்றை யொட்டிச் சிலவுமாகவும் அறிவு அவற்றை ஆக்கித் தந்திருக்கிறது.

தமிழையே எடுத்துக்கொள்! மனித இனம் மேலே கண்டவாறு இருந்தக் காலத்தில் தமிழகம் விதிவிலக்காக இருந்திருக்க முடியுமா? ஆனால், மற்றெல்லா இன சமூகங்களையும்விட எவ்வளவு மேம்பாடு அடைந்திருந்திருக்கிறது. அந்தக் காலத்திலேயே, மொழிக்கு ஏறத்தாழ வடிவம் பெற்று — மற்ற சில மொழிகளுக்கும் சொற்களைத் தானம் தந்திருக்கிறதே!

நண்பா! புழுக்கள், பிற பொருள்களில் அமைந்த உயிரணுக்களால் பிறப்பதுபோல, மக்கள் பிறப்பதில்லை;

மக்கள், மக்களிடத்திலிருந்துதான் தோன்றவேண்டும். ஆகவே, மக்கள் இனம் அனைத்தும்—அது எந்தக் கண்டத்ததாயினும் ஒரு படைப்புக் காலத்தது என்று ஓர்தல் கடினமோ!

அப்படியானால், உலகத்தில் இன்றைக்கு எத்தனை ஆயிரம் மொழிகள் உள்ளன. ஆங்கிலம், பிரஞ்சு, சீனம்போன்ற பழம் புகழ்பெற்ற மொழிகள் எப்படி உண்டாயின?

மனித இனத்தின் படைப்புக்காலம் ஒன்றே எனில் அந்த மனித இனத்தின் ஒலிச்சுட்டுக்களே மொழியெனில், இத்தனை மொழிகள் எப்படி இருக்க முடியும்? உலக மொழியனைத்தும் ஒரே மொழியாகவன்றோ இருக்கவேண்டும்?

முதன் முதலாக மனிதன் தோன்றிய இடம் லெமூரியாக் கண்டம் என்றும், அந்த லெமூரியாக் கண்டம், தமிழகத்திற்குச் சொந்தமானது என்றும் கூறுகிற மொழியறிஞர்களும் இருக்கிறார்கள். அப்படியானால் உலக முழுதுக்குமான மொழி தமிழாகவல்லவா இருக்க வேண்டும்?

ஐயம் ஏற்படுகிறதா நண்பா! மனிதனும், அவனது குரல்சுட்டும், இடத்துக்கு இடம், அங்குள்ள தட்ட—வெப்ப நிலைமைக்கேற்ப மாறுபடும் என்றும், அம்மாறுபாட்டுக்கு உட்பட்ட மனிதனது குரல் சுட்டும் மாறுபாடு அடையும் எனவும் குரல்—ஒலி மாறுபாடுகளே மொழி வேறுபாடாக அமைந்தது எனவும் கூறுகிறார்கள் மொழி நூல் ஆராய்ச்சியாளர்கள்.

இன்றைக்கு கல்லூரியிலோ, அல்லது ஏடுகள் இதழ்களிலோ, காண்கின்ற—படிக்கின்ற தமிழை பண்டைய தமிழ் இலக்கியங்களில் காண முடிகிறதா? அந்த தமிழ் அவ்வளவு எளிதில் புரிந்துவிடக் கூடியதாக இருக்கிறதா? புலவர் பட்டம் பெற்றவர்கள் மட்டும் போதாதே புரிந்துகொள்ள. மொழியறிவே, தனியாக அல்லவா தேவைப்படுகிறது.

கற்பு நெறிக்குக்கூட தலைக்கற்பு—இடைக் கற்பு—கடைக் கற்பு என்று பிரித்து வைத்திருந்தார்கள் பண்டோர்.

கணவன் காலமானான் எனக்கேட்ட காலத்தேயே வீழ்ந்து உயிர்விடுதல் என்பது தலைக் கற்பு என்றும், இறந்த பின்னர்—எரி வளர்த்து அதனில் வீழ்ந்து உயிர் விடுதல் இடைக்கற்பு என்றும், கணவன் இறந்த பின், அவனுடன் மறுமை வாழ்க்கையிலும் ஒன்றி வாழ நோன்பு நோற்று சாவு வந்த காலத்தில் சாதல் கடைக் கற்பு என்றும் பகுத்து வைத்திருந்ததைப்போலவே நண்பா! தமிழுக்கும் 'கற்புநெறி' பேணி தலை, இடை கடைச்சங்கம் என்று இயற்றிக்காத்துள்ள நம் முன்னோர்—காட்டுமிராண்டிகள் என்பதனை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

பந்தாட்டப் பாட்டு—ஊசல் பாட்டு—நெல்குத்தல் பாட்டு—உழவுப் பாட்டு — போர்ப் பாட்டு — ஒப்பாரிப் பாட்டு—தொழுகைப் பாட்டு — ஏற்றப் பாட்டு — கப்பற் பாட்டு— இறைவைப் பாட்டு—பள்ளியெழுச்சிப் பாட்டு—தாலாட்டுப் பாட்டு—பாவைப் பாட்டு—மறத்தியர்பாட்டு—குறிப் பாட்டு — பள்ளுப் பாட்டு — பறைப் பாட்டு — வள்ளுவர் பாட்டு—வண்டிப் பாட்டு-அம்மானைப் பாட்டு--கழங்குப் பாட்டு — பல்லங்குழிப் பாட்டு — தொழில் பாட்டு — பாண்டிப் பாட்டு — கடை திறப்புப் பாட்டு—சிந்துப் பாட்டு — சந்தப் பாட்டு — பிள்ளைப் பாட்டு — கொள்ளைப் பாட்டு—கள்ளர் பாட்டு—வெற்றிப் பாட்டு—வாழ்த்துப் பாட்டு—மங்கலப் பாட்டு — மணப் பாட்டு—காதற் பாட்டு—காவடிப் பாட்டு — பகடுறப்பர் பாட்டு—இடையர் பாட்டு—வேடுவர் பாட்டு—நடைப் பாட்டு—கும்மிப் பாட்டு—குரவைப் பாட்டு — கைவீசற் பாட்டு—சப்பாணிப் பாட்டு—கீரைப் பாட்டு — கோலப் பாட்டு—கோலடிப் பாட்டு—சிலம்பப் பாட்டு — வில்லுப் பாட்டு தல்லுப் பாட்டு — கோயிற் பாட்டு — குழற் பாட்டு — கூத்துப் பாட்டு.

இவையெல்லாம் தமிழில் உள்ள பாட்டு முறைகள். மனித வாழ்க்கையுடன் இணைந்த அத்துணைக்கும் பாட்டுக் கட்டிக்கொண்டு இசையின்பத்தோடு வாழ்ந்த தமிழகம், காட்டுமிராண்டி இனமா?

மொழியானது, மனிதனது உள்ளுணர்வை வளர்க்கும். மனிதன் மொழியின் உயிரை வளர்க்கவேண்டும்

இதுதான் மொழியின், மனிதனின் இலக்கணம். இந்த இலக்கணப் பின்னணியுடன் பாரேன்! மேலே கண்ட பாடல் வகைகளை இயற்றிச் சுகிக்குமளவுக்கு மனிதனை மொழி வளர்த்துவிட்டிருக்கிறதா இல்லையா!

எழுத்து வடிவங்களே கூட வளர்ந்திருக்கிறதா இல்லையா?

மொழி தன் கடமையைச் செய்து கொண்டே வருகிறது—சில சுயநலமற்ற பேரறிவாளர் துணையோடு.

ஆனால் மனிதன்? தன்மொழிக்குச் செய்ய வேண்டியதை மறந்துவிட்டான்! தன்நலமும் தன்வாழ்வும் பேணத்தலைப்பட்டு விட்டதனாலேயே அவன் இன்று காட்டுமிராண்டி என்று கூற வேண்டிய நிலையை யடைந்துவிட்டிருக்கிறான்.

மொழி—அவனை காட்டுமிராண்டியாக்க வில்லை.

மொழி—அவனை காட்டுமிராண்டியாக வைத்திருக்கவும் இல்லை.

அறியாதவர்கள்!

அறியாமையில் உழல்பவர்கள்தான் மொழி ஆதிக்கம் பற்றிய சண்டையில் ஈடுபட வேண்டும்; மொழி வெறியினால் எதையும் சாதித்துவிட முடியும் என்பது இயலாத காரியம்.

—நேரு

[14-6-63-ல் சென்னை மாநகராட்சியில்]

மொழி—அவனை உலக மக்களோடு தொடர்பு கொள்ளமுடியாதவனுகவும் வைத்திருக்கவில்லை.

மொழி—அவனை பிறர் பழிக்கத்தக்க அளவு வளர்த்துக்கொண்டு வரவில்லை.

மொழி—அவனைப் பொருமைக்காரனுக இருக்கும்படிச் செய்துவிடவில்லை.

மனிதன்தான் — மொழியைக் காட்டுமிராண்டித் தனமானது என்று கருதிவிட்டான்!

மொழிக்குத் தான்-செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டதனுலேயே அவன் இன்றுக் காட்டுமிராண்டியாகி இருக்கிருன்.

மொழி—காட்டுமிராண்டித்தனமானதாக இல்லை.

மனிதன் — எண்ணத்தால், செயலால் காட்டுமிராண்டியாகிக்கொண்டிருக்கிருன்!

காட்டுமிராண்டிக்கால வாழ்க்கையைக் கண்டாய்! கற்பு நெறியைக் கண்டாய்! காதல் விளையாட்டுகளைக் கண்டாய்!

இன்றைய நிலை என்ன?

மொழி — மனிதனை வளர்த்திருக்கிறது. மனிதன்—மொழியை வளர்க்க மறுக்கிருன்.

வேறுபாடு அவ்வளவுதான்! அதனுலேயே பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் தமிழனைக் காய்ந்துகொள்ள வேண்டி நேரும்போது, அவன் மொழியையும் காய்கிருர். கற்பினையும் காய்கிருர். அப்போதாவது தன் மானம் பிறவாதா? அயலான் மொழியை வளர்க்க எடுக்கும் நடைமுறைகளைப் புரிந்துகொள்ளமாட்டானு என்று!

இது கண்டுதான் பாவம் காங்கிரசுக்காரர்களுக்குப் பொறுக்கவில்லை. ஏனென்ருல், தமிழைக் காக்கவும், அயல்மொழித் திணிப்பின் மூலம் தமிழின் அழிவைத் தடுத்து நிறுத்தவும் உயிர்களை ஆகுதி கொடுத்தவர்கள் அல்லவா காங்கிரசார்! அந்தக் குருதி கொதிப்பேறுகிறது. ஆத்திரம் கொப்பளிக்கிறது.

தமிழுக்காகத் தலை கொடுக்கத் துடிக்கிருர்கள் காங்கிரசார்! 'வாழ்க தமிழ்' என்றுகூட குரல் கொடுக்கத் தொடங்கி இருக்கிருர்களே நண்பா! புதிய காதல்! புதிய காட்சிகள்!! காங்கிரஸ்காரர்களும் தமிழ் காக்க வருகிருர்கள் என்ருல் அதுவும் நமக்கு இலாபம்தானே!

கொள் என்றவுடன் வாய் திறக்கும் குதிரை, கடிவாளம் என்றவுடன் மூடிக்கொள்வதேன் என்கிருயா?

தமிழ் வாழ்க என்று—கழக அரசைப் பார்த்துதான் முழங்குகிருர்கள்.

'தமிழ் வாழ்க' என்று டில்லியைப்பார்த்துக் கூறுவதில்லை என்பதையும் புரிந்துகொள்.

பெரியார் அவர்களது பேச்சில், பொருள் இருப்பதை நீ உணர முடியும்.

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்.

தரம் குறைய வேண்டாம்!

எழுத்தாளர்கள் கூடிட—கலந்துரையாடிட ஒரு மண்டபம் தேவை என்கிருர்கள். எனக்குள்ள ஐயப்பாடெல்லாம் எழுத்தாளர் கூடுவதும் கலந்துரையாடுவதும் உண்டா என்பதுதான்! அது உறுதிப்படுமானுல் கட்டிடம் அமைவதும் உறுதியாகும். ஏனெனில் அப்படிப்பட்ட ஒற்றுமை நீண்ட நாட்களாக நம்மிடம் இல்லை. நான் கருத்து வேறுபாடுகளைக் குறிப்பிடவில்லை. எழுத்துருவில் இருக்கவேண்டிய கருத்து வேறுபாடுகள் கருத்துப் போராக—வெறுப்புப் போராட்டமாக மாறி, தமிழ் மேம்பாட்டையும், கலாசாரத்தையும் கெடுத்துவிட அனுமதிக்கக்கூடாது. உங்களில் ஒருவனென்கிற முறையில் எழுத்தாளர்மீது கொண்டுள்ள பற்று காரணமாக நான் இங்கு இதைக் கூறுகிறேன்.

எழுத்தாளரெல்லாம் ஒரு சாதி என்ருர்கள். சாதி என்ருல் அதற்குரிய கட்டுப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நான் படித்துப் பாராட்டக்கூடிய எழுத்தாற்றல் காட்டுகிறவர்களும் அரசியல் துறையில் அரசியல் தலைவர்களைப்பற்றி எழுதும்போது ஏனோ நாராச நடைக்குப் போய்விடுகிருர்கள். இதையெல்லாம் மறந்திட அவர்கள் எழுதிய நல்ல நூல்களைப் படித்து ஆறுதல் அடைந்திருக்கிறேன்.

தரக்குறைவாக எழுதுகின்றவர்களுக்கு மூன்று முறை முன்னறிவிப்புக் கொடுத்திட வேண்டும். தாய் தந்தையர் போலக் கடிந்துகொள்ள வேண்டும், இல்லையென்ருல் தமிழ் நாட்டில் தமிழ் எழுத்துக்களின் தரம் குறையும், தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டுமென்ருர்களே—அந்த நம்பிக்கை துகள் துகளாகிவிடும். இந்த நிலை நீடிக்க அனுமதித்தால் நாகரிகம் வளராது.

10, 15 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைக் காட்டிலும் தரம் குறைந்து எழுதுவதென்பது இப்போது வளர்ந்துள்ளது.

தமிழ் எழுத்துத் துறை நண்பர்கள் தமிழ் எழுத்து நடையிலே தரம் குறைவதை அனுமதிக்கக்கூடாது. வகையான தமிழ், வளமான தமிழ், பண்பாடுள்ள தமிழ் வளர அனைத்துலகத் தமிழ் எழுத்தாளர்களையும் கல்கியின் பெயரால் வேண்டிக்கொள்கிறேன். மண்டபம் கட்டுவதைக் காட்டிலும் இது முக்கியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிச் சொல்வதால் மண்டபம் கட்டுவது விடப்பட்டதாகப் பொருளல்ல.

அறிஞர் அண்ணு அவர்களை எழுத்தாளர்கள் சங்கத்தினர் அணுகுவார்களானுல் தமிழக அரசினர் எழுத்தாளர்களாகிய நம்மோடு ஒத்துழைப்பார்கள். 13 ஆண்டுகளாக முயற்சித்தோம் — முடியவில்லை என்ற எஸ். டி. சுந்தரம் அவர்களின் பெருமூச்செல்லாம் பேரானந்தமாக மாறும். பேராசிரியர் கல்கியின் பெயரால் மண்டபம் எழும்.

—அமைச்சர் மு. கருணுநிதி.

தமிழகமே, வழிகாட்டு!

“ஏழை மக்கள்மீது மேலும் வரி விதிக்கக்கூடாது என்கிற முறையில்தான் புது டில்லியில் நடைபெற்ற திட்டக்கமிஷன் கூட்டத்தில் கலந்து கொண்ட நான் வற்புறுத்தினேன்.

விவசாயிகளுக்கு உள்ள தண்ணீர்த் தீர்வையை உயர்த்திட வேண்டுமென்றும் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்றும் அதன்மூலம் பணத்தைச் சேர்த்துத் திட்டங்களுக்கு உதவ வேண்டுமென்றும் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

முதன் முதலாக நான்தான் எழுந்து பேசினேன். இது நடக்கிற காரியமல்ல. நான் இதற்கு ஒப்பவும் மாட்டேன் என்றதோடு இதைப்பற்றி யோசிக்கவும் நான் தயாராக இல்லையென்று இரண்டையும் திட்டவட்டமாக அறிவித்தேன்.

நான் சொன்ன பிறகுதான், அண்ணாதுரை சொன்னதுபோல் நாங்களும் இதற்கு உடன்பட முடியாதென்று காங்கிரஸ் முதலமைச்சர்களும் தெரிவித்தார்கள்.

ஒரே ஒருவர், அரியானா மாநிலத்திலிருந்து வந்திருந்த முதலமைச்சரல்ல கவர்னர்—இந்தக் கருத்தை எதிர்த்தார். அதற்குக் காரணமில்லாமலில்லை. எத்தனை நாளைக்கு நாம் பதவியில் இருக்கப்போகிறோம். மற்றவர்கள் வந்த பிறகு எப்படியாவது போகட்டும் என்கிற முறையில் அவர் தமது கருத்தைச் சொன்னார்.

வரி மூலம் மட்டும் பணத்தைத் திரட்டி மக்களின் குறைகளைத் தீர்த்துவிட முடியும் என்று கருத முடியாது. வரி ஓரளவுதான் பயன்படும். மக்களின் வசதி வாய்ப்புகளும் பெருகவேண்டும். ஆகவே மத்திய அரசு பல தொழில்களில் போட்டிருக்கின்ற மூலதனத்துக்கான பலன் கிடைத்திட வழி செய்திட வேண்டும்.

மத்திய அரசு இரண்டாயிரம் கோடி ரூபாயில் பிலாய், ரூர்கேலா, சிந்திரி, போன்ற தொழில்களில் தனது மூலதனத்தை முடக்கியுள்ளது. இந்த இரண்டாயிரம் கோடி ரூபாயும் எங்கிருந்து கிடைக்கும்? நீங்களும் நானும் வரியாகக் கொடுத்தது; அமெரிக்கா இங்கு கொடுத்தது. இப்படியெல்லாம் திரட்டப்பட்ட பணத்தை மூலதனமாக்கிப் போட்ட தொழில்களில் கிடைத்த லாபமென்ன?

கொடுத்த மக்கள் பலனைப் பெறவில்லை. கடன் கொடுத்த நாடுகளுக்கு வட்டியும் செலுத்தியபாடில்லை.

2000 கோடி ரூபாய் மூலதனம் போட்ட தொழிலில், பெறவேண்டிய அளவு பலன்களைப் பெற்றோமில்லை.

நீ செய்வதுதானே என்று கேட்பார்களானால் தமிழ் நாட்டிற்கு இருக்கும் தொழில்கள் என்ன? எப்படிப் பெறமுடியும் என்பதை உணரவேண்டும்.

பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையும் ஆவடி டாங்கித் தொழிற்சாலையும் திருச்சி கொதிகலன் தொழிற்சாலையும் துப்பாக்கித் தொழிற்சாலையும் மத்திய அரசுக்குச் சொந்தமானவை. நம்மிடம் இருப்பதெல்லாம் காஞ்சி சுடர் தீப்பெட்டித் தொழிற்சாலையும் மாலு செருப்புத் தொழிற்சாலையும் விருத்தாசலம் களிமண் பொம்மைத் தயாரிப்புத் தொழிற்சாலையும், தஞ்சையில் பனை ஓலையில் நேர்த்தியான பொம்மை செய்யும் நிலையமும் கோரைப்பாய் உற்பத்தி செய்யும் நிலையமும் இருக்கின்றன.

மிகப்பெரிய தொழிற்சாலைகள் யாவும் மத்திய அரசிடமே உள்ளன. உதகை பிலிம் தொழிற்சாலையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரிச்சுரங்கமும் அவர்களிடமே. ஆகவே இரண்டாயிரம் கோடி ரூபாய் மூலதனம் முடக்கப்பட்டுள்ள இத்தொழில்களில் இருந்து வருவாயைப் பெருக்கினால் ஏழை எளிய மக்களை வாட்டுகிற வரிகளைக் குறைக்கலாம் என்று நான் அங்கு எடுத்துச் சொன்னேன்.

இந்தியப் பேரரசு தன் இராணுவச் செலவைக் குறைத்தேயாகவேண்டும் என்று நான் சொன்னபோது என்னை உற்று உற்றுப் பார்த்தார்கள்.

பக்தவத்சலமாக இருந்திருந்தால் நாட்டுப் பற்றற்றபேச்சு என்று சொல்லிருப்பார். எப்படியிருப்பினும் இந்திய அரசு இராணுவச் செலவைச் சிக்கனப்படுத்தியே ஆகவேண்டும்.

இந்தியாவுக்கு ஆபத்து வராத அளவுக்குப் பாதுகாப்பைப் பலப்படுத்திச் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் ரூபாய் 100 கோடி வரை கிடைக்குமென்று நான் எடுத்துக் கூறினேன்.

பெரிய காங்கிரஸ்காரர்களெல்லாம் பதறுவார்கள், சீனாக்காரனும் பாகிஸ்தான்காரனும் இருக்கும்போது இப்படியா பேசுவது என்று கேட்கக்கூடும்—சீனாக்காரன் அணுகுண்டு வைத்திருக்கிறானே, அதைச் சமாளிக்கவேண்டாமா? என்று கேட்பார்கள். சீனாக்காரன் நம்மை நோக்கி வந்தால் அதே அணுகுண்டை வைத்திருக்கும் மற்ற நாடுகளின் உதவி நமக்குக் கிடைத்தே தீரும்.

அது மட்டுமல்ல, 18 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவர்களுக்குக் கட்டாய ராணுவப் பயிற்சி அளித்து தேவையானபோது எல்லைக்கு அனுப்பலாம்.

அந்த முறையில் பாதுகாப்பைப் பலப்படுத்தலாம். இதற்கு லட்சக்கணக்கான கழகத் தோழர்களைப் பயிற்சிக்கு அனுப்ப நான் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்தேன்.

பாதுகாப்புச் செலவைக் குறைத்து சிக்கனப்படுத்துவது.

வருமானவரி செலுத்தாதவரிடமிருந்து அதை மீட்பது.

2-ஆயிரம் கோடி ரூபாய் மூலதனமிடப்பட்டுள்ள தொழில்களிலிருந்து வருவாய்பெற திட்டமிட்டு செயலாற்றுவது.

இம்மூன்று வழிகளைக் கடைப்பிடித்துச் செயலாற்றினால் கணிசமான அளவு நிதி கிடைக்கும்.

ஏழைகளை வாழ்வைக்க முடியும் என்று தமிழகத்தின் சார்பில் நான் தெரிவித்தேன்.

முன்னாள் தமிழக அமைச்சரும் தற்போதைய திட்டக்குழு உறுப்பினருமான ஆர். வெங்கட்ராமன், கூட்ட முடிவில் என்னைச் சந்தித்து உங்களது யோசனைகளைச் செயல்படுத்த முயலுவோம் என்று தெரிவித்தார்.

இந்தியாவின் ஒரு உறுப்பு என்கிற முறையில் இந்தியா முழுமைக்கும் ஆலோசனை கூறி உதவ வேண்டிய நிலையில் தமிழ்நாடு இருக்கிறது என்றும் வெங்கட்ராமன் என்னிடம் கூறினார்.

—வண்ணைக் கூட்டத்தில் முதலமைச்சர் அண்ணா.

4-ம் பக்கத்தொடர்ச்சி

பதற்கு முன், ...ாத்தி ெ ழி தோன்றுமுன் குஜராத்தி ஏற்படுவதற்கு ... ஞ தெலுங்குக்குக்கூட தாயாக இருக்கி ற ...ழி தமிழ்—உலகத்துக்கே நாகரிகம் ... றளித் நாடு தமிழ் நாடு—வாணிபம் வளர்த்து புகழ் மணம் பரப்பி வாகை சூடி வாழ்ந்த இனம் தமிழினம்—அந்த இனத்தின் மொழியாம் தமிழுக்கு அந்த இடத்தை ஒதுக்குங்கள் என்று குரல் கொடுக்க நினைத்தால்?

இந்தி ஆட்சிமொழி என்றல் கேட்டு அகங் குளிரும் இந்திக்காரர்களது இதயம் எப்படி இருக்கும்?

ஆட்சி மொழி விவகாரத்தில், அந்த அளவுக்குக் கொதிப்பு இந்தி மொழி பேசாத மக்களுக்கு இருக்காதா? இருக்கக் கூடாதா?

எல்லாவற்றுக்கும் மேலாக, "இந்தப் பிரச்னையை இந்தி தெரிந்தவர்களிடம் விடமாட்டேன்; தெரியாதவர்களிடமே விடுவேன்"—என்று நேரு அளித்த உத்திர வாதத்துக்கு என்னதான் பொருள், என்ருவது இந்தி பேசாதவர்கள் நினைத்துப் பார்க்க முடியாதா?

> "மொழிச் சிக்கலுக்கு ஆக்கமுறையில் தீர்வு தேடவேண்டுமானல் மதச்சார்போ அல்லது அரசியல்சார்போ இருக்கக்கூடாது; மொழிச்சிக்கலை அரசியலுடன் பிணைத்து விடின், அந்த மொழியின் வளர்ச்சி தடைப்படும்."

என்று 22–7–61ல் டில்லி பஞ்சாபிகள் மாநாட்டில் நேரு பேசிய பேச்சுக்களைப் புரிந்துகொண்டுதான் இந்தி வெறியர்கள் கூப்பாடு போடுகிருர்களா? கும்மாளம் அடிக்கிருர்களா? என்றெல்லாம் தேவையற்ற ஐயத்தை இந்தி பேசுவோர் உண்டாக்கிக்கொண்டிருக்கிருர்கள். தங்கள் நடவடிக்கையின் மூலம்.

மக்களது ஒரு பிரச்னையை, மக்களது சார்பில், அவர்களது பிரதிநிதிகள்தான் ஆட்சியினரிடம் எடுத்துக் கூறமுடியுமே அல்லாது–மக்களெல்லாம் திரண்டு வந்து ஆட்சி அலுவலகத்தின்முன் கூடிநின்று கூற வேண்டும் என்று அரசு எதிர்பார்க்குமேயானல் அதனைவிட முட்டாள்தனமெதுவும் இருக்க முடியாது.

இந்தி விஷயத்தில் இந்தி பேசாத பகுதி மக்களது கருத்துக்களை–விருப்பத்தைதான், அவர்களது பிரதிநிதிகள க நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் எடுத்துக் கா கிருர்கள்.

'பிடித்த முயலுக்கு மூன்றுகால்' என்ற ரீதியில் மத்திய அரசு அவற்றையெல்லாம் தள்ளிவிட்டு இந்தி வெறியர்தம் வெறித்தனத்துக்குத் தன்னைக் கட்டுப் படுத்திக்கொள்ளுமானல்—

> ஆங்கிலம் இணைமொழியாக நீடித்திருக்கும்;
>
> மக்கள் விரும்பும் வரையில் ஆங்கில மொழியை அகற்றமாட்டேன்

என்ற நேருவின் வாக்குறுதியோ அல்லது,

> மொழிச் சிக்கலில் தீர்வுகாண மதச் சார்பும், அரசியல் சார்பும் இருக்கக்கூடாது

என்ற நேருவினது பஞ்சாபிகள் மாநாட்டுப் பேச்சோ—

> ஆங்கிலம்பற்றிய தீர்வுகாணும் முடிவை இந்திக்காரர்களிடம் விடமாட்டேன்

என்ற உத்திரவாதமோ சரியான முறையில் மதித்துச் செயலாற்றப்படுகிறது என்பதற்கு நம்பிக்கைக் குரிய சான்று இல்லாமலே போய்விடக் கூடும்.

> அல்லாமல் நேரு பிரானது உத்திர வாதம், நாடாளுமன்றத்திலேயே வைக்கப் பெற்று, பெரும்பான்மை ஒப்புதலைப் பெற்றிருக்கிறபோது, இப்போது நாடாளுமன்றத்தில் இப்படியொரு, கூப்பாடு எதற்கோ?

என்றும் எண்ணத் தோன்றும்! எனவே மத்திய அரசினர், காந்திய நெறியையும், நேருவின் தத்துவங்களையும் ஒப்புக்கொள்பவர்களாக செயல்பட வேண்டும் என்ற கொள்கையில் நம்பிக்கையுடைவர்களானல்—

> நேருவினது, கடந்த காலப் பாராளுமன்ற பேச்சுக்களை உடனடியாகக்கூடி உட்கார்ந்து படித்து அல்லது படிக்கச் சொல்லிக் கேட்டு தெளிவுபெற்ருலல்லாது, மொழிச்சிக்கலுக்கு உரிய தீர்வு கண்டுவிட்டவர்களாக ஆகமாட்டார்கள்—ஆக முடியாது.

இந்தி வெறிபிடித்தவர்களிடம் சிக்கிக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், தாங்களே அதன் வெறித்தனத்துக்கு பலியாகிவிட்டிருப்பவர்களிடம் நாம் நல்ல தீர்ப்பை எதிர்பார்க்கவேண்டிய நிலைமை நாட்டிலிருக்கிறது! என்ன செய்வது! தீர்வு கிடைக்குமா, மொழிச் சிக்கலுக்கு? தீர்ப்பார்களா இந்தி பேசாதோர் விருப்பங்களை?

பொறுத்துப் பார்ப்போம்.

❋

நம்மவாட்சி நலமுறுக!

—(இளம்பிறையான்)—

"தமிழ்முழக்கம் தெருவெங்கும் செய்தல் வேண்டும்
தரணியிலே இதுபோன்று சிறந்து காணும்
அமிழ்தான மொழிவேறு எதுவு மில்லை
அறிந்தமொழி பலவற்றுள்" என்றே சொன்ன
தமிழ்மகனும் பாரதியின் வாக்கிற் கொப்பத்
தரணியிலே உள்ளோரை ஒன்று கூட்டித்
தமிழுலக மாநாடு நடத்தும் பேறு
பெற்றதமி ழக அரசின் பேறு என்னே!

உலகமெலாம் கொண்டாடும் குறளை ஈந்த
உத்தமனர் வள்ளுவர்க்கும், கம்பர், மற்றும்
கலம்செலுத்தும் சிதம்பரனர், வீரமா முனிவர்,
கவிபாரதி, அவர் தாசன், மற்றும் பெண்கள்
குலம்விளக்கும் கண்ணகிக்கும் ஔவை யார்க்கும்
குன்றின்மேல் விளக்கெனவே சிலையை நாட்டி
நலம்விளக்கும் தமிழகத்து ஆட்சி மண்மேல்
நலமுற்றுப் பல்லாண்டு நிலைத்து வாழ்க!!

10-12-67 Regd. No. M. 7894

சார், தெரியுமா சேதி?

சட்டியில் இருப்பது?

அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் என்பது தமிழ்மறை. எண்ணத்திலிருப்பதுதான் சிலபல வேலைகளில் செயல்களாக உருவாகும் என்பது தத்துவ வழக்கு. டெல்லி நாடாளுமன்றத்தில் கடந்த கிழமை, ஆட்சிமொழித் திருத்த மசோதாவைக் கொண்டுவர அனுமதி கோரும் பிரேரணையின்போது ஓட்டுக்கு விடப்பட்டதாம்! பிரதமர் இந்திரா என்ன செய்தார் தெரியுமா? உள்ளத்தைப் பிரதிபலித்துக் காட்டிவிட்டார்! ஆமாம்! பிரேரணையை எதிர்த்து வாக்களித்துவிட்டாராம்! தவறு புரியவைக்கப்பட்டதும், திருத்திக்கொண்டாராம் பிரதமர்! சட்டியிலிருப்பதுதானே அகப்பையில் வரும்!

அறியப்பட்டது அறிவு!

அறிவு என்பது ஆண்டவன் கொடையல்ல—கண்ட, கேட்ட, படித்தறிந்த ஞானத்தால் வளர்த்துக் கொள்ளப்படுவது என்பதற்குப் புதியதொரு சான்று கிடைத்திருக்கிறது, காங்கிரசுக் கட்சியிலிருந்து! தமிழக அரசு பஸ்களில் குறள் பொறித்திருக்கிறதல்லவா அவற்றில் ஒன்று 'தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்'என்பது. இதற்குப் புதிய விளக்கம் கொடுக்க முன்வந்து கொடுத்திருக்கும் பொருளின் மூலம் காங்கிரஸ் பெற்றுக்கொண்டிருப்பது அறிவுதானா என்ற ஐயம் யாருக்காவது பிறந்தால் ஆச்சரியப்படத்தக்கது அல்ல அது!

எதிர்காலம், 'கோவிந்தா!'

மேற்கு வங்கத்தில் பி. சி. கோஷின் அமைச்சரவைக்கு காங்கிரசுக் கட்சி ஆதரவு தருவதை காமராசர் விரும்பவில்லை—என்று செய்தி வெளியாகி இருக்கிறது. இன்று வரையில் காங்கிரசுக் கட்சியின் தலைவர் காமராசர்! தன் கட்சி ஆதரவு மே. வங்க அரசுக்கு இருக்கக்கூடாது என்று விரும்புகிறார், அந்த கட்சியின் தலைவர். ஆனால் நிபந்தனையற்ற ஆதரவு தருவது என்று கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் முடிவெடுத்து விட்டார்கள். அமைச்சரவையிலும் பங்கு பற்றப் போவதாக வதந்தி. தலைவரது விருப்பத்துக்கு மாறாகக் கட்சி செயல்படுகிறது. அல்லது கட்சியை மத்திய அமைச்சரவையோ அன்றி பிரதமரோ இயக்கிக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது. காங்கிரசின் எதிர்காலத்தை நினைத்து அட்வான்சாக இரண்டு ச்சோ! ச்சோ!! கொட்டி வையுங்களேன்!

நல்லபுத்தி வருமா?

சேக்கிழாருக்கு இருந்த தமிழ்ப்பற்று அவரது பரம்பரைக்கு இல்லாமலா போகும்? இந்தி நுழைவைத் தடுத்து நிறுத்த தமிழ் நாடெங்கும் கிளர்ந்தெழுந்த போது இராணுவத்தைக் கொண்டுவந்து 500க்கு மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்டுவிட்ட புண்ணியவான் பக்தவத்சலம் தமிழுக்குச் செய்த சேவையின் அளவு, தி. மு. க. இதுவரை செய்யவில்லை என்று கிருஷ்ணகிரிக்குப் போய் விளக்கி இருக்கிறார்! காங்கிரசுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் என்று பெயர் வைத்த தியாகம் மாபெரும் மொழித் தியாகமாம்! காங்கிரஸ் தோற்றுப் போனதனால்தான் அதற்கு இப்படிப்பட்ட புத்திகூட வந்திருக்கிறதாம்!! வரட்டும், வரட்டும்!! நல்லபுத்தி வரட்டும்!!!

தீ பரவட்டும்!

திருநெல்வேலி மாவட்டத்தில், பாளையங்கோட்டை முதலான சில நகரங்களில் ஓட்டல்களில் காபியோ பிற இனிப்புப் பண்டங்களோ விற்பனை செய்வதில்லை என்ற ஒரு செய்தி வந்திருந்தது! (இப்போது தொடர்கிறதா என்று தெரியவில்லை!) சர்க்கரை விலை 'ஓகோ!' என்று மேலே போய்விட்டதுதான் காரணம் என்று அறிவித்திருந்தார்கள்! தமிழ் நாட்டின் அமைதிக்குக் கேடு இந்த 'சர்க்கரை வடிவத்தில்'தான் வந்துவிடுமோ என்று நினைக்கவேண்டி இருக்கிறது. இப்படித்தான் நடக்கவேண்டும் என்று மத்திய அரசு திட்டமிட்டுச் செயல்படுமானால், திருநெல்வேலி மாவட்ட நகர ஓட்டல்களின் முடிவு மத்திய அரசுக்குச் சரியான சவாலாகும்! நல்ல முடிவு இது! நாடெங்கும் பரவட்டும்! தீயாக பரவட்டும்!! உடனே, உடனே உடனே பரவட்டும் இந்த நடைமுறை!

எலும்புக்கு ருசி

ஆட்சி மொழி திருத்தச் சட்டத்திற்குச் சில திருத்தங்களைத் தந்து (தற்காலிகமாக) ஏற்றுக்கொள்ள கழகம் முடிவெடுத்துள்ளது. அரசியல் சட்டத்தைத் திருத்திப் பாதுகாப்பளிப்பது ஒன்றுதான் முழுமையானது என்பதைக் கழகம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது. "தற்போதைய சூழ் நிலையில் எல்லா தரப்பட்ட மக்களுக்கும் திருப்தி தரும் வகையில் சட்டமியற்றுவது இயலாது" என்று மாணவர் குழுவுக்களித்த பேட்டியில் பிரதமர் இந்திரா அறிவித்திருக்கிறார். காங்கிரசின் போட்டிக் குழுவோ, போதும், போதும், இதுவே போதும்! என்று கூறிவிட்டு வந்திருக்கிறார்கள்! இந்திக்காரர்களின் எலும்புத் துண்டுக்கு எவ்வளவு ருசி இருக்கும் என்பது காங்கிரசுக்காரர்களுக்குத்தானே தெரியும்!

தட்டுப்பாடு இருக்காது!

சர்க்கரையின் அருமைக்குச் சுவையானதொரு செய்தி கிடைத்திருக்கிறது. உத்திரப்பிரதேசத்தில்தான் பள்ளத்தாக்குப் பகுதியில் சில அதிகாரிகள், 'கருத்தடை செய்துகொண்டால் அதிக அளவு சர்க்கரை கொடுக்கப்படும்!' என்று அறிவித்திருக்கிறார்களாம்! அபாரமான யோசனை! அத்துடன் ஹார்லிக்ஸ், அமுல் போன்ற சிலவற்றையும் சேர்த்துக்கொண்டால் இன்னும் நல்ல பலன் கிடைக்கக்கூடுமில்லையா! இவற்றிற்கும் தட்டுப்பாடு இல்லாமல் போகுமே!!

பயிறும் வயிறும்!

'ஓராண்டுக்குள் பருப்பு வகைகளின் விலையைக் குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வேன். தமிழகத்திலேயே பருப்பு உற்பத்திக்கு வகை காண்பேன்" என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்திருந்தார்கள்! அதனையொட்டி மதுரையில் கலெக்டர்கள் சிலர் கூடி திட்டங்களையும் சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்திருக்கிறார்கள். இந்த உற்பத்தியிலீடுபடும் விவசாயிகளுக்குச் சில தனி சலுகைகளையும் அறிவித்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் கோடைப்பயிறு என்ற முறையில், உளுந்து, துவரை முதலியவைகளை அறுவடைக்குப் பின் அந்த நஞ்சையிலேயே விளைவிக்கும் வழக்கம் உண்டு! இதுபற்றியும் கவனம் செலுத்தினால் பருப்பு விலை எப்படி உயர்ந்து கொண்டே போகமுடியும்?

10-12-67 Regd. No. M. 7894

நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது —
அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.

சரியான 'பாக்கிங்' முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.
அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்ப நிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்ற வசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த 'பாக்கிங்' முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி 'பாக்' செய்தால் இப் பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிறார்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளை சிபாரிசு செய்வது - உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகரடின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த 'பாக்கிங்' முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றுக்குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில், சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB

மெட்டல் பாக்ஸ்

பாதுகாப்பான பாக்கிங்

MB/4101

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.